பக்கங்கள்: பதினான்கு

மாநகர சபை யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 27 புதன்கிழமை (09-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:197

## இயல்பு வாழ்வுக்கு பங்கம் ஏற்படாமல் வெள்ளியன்று கண்டனப்பேரணி நடக்கும்

### பொது அமைப்புக்கள் ஒன்றுகூடித் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படாதவகையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கண்டனப் பேரணியை நடத்துவதென்று யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் முடிவு செய்திருக்கின்றது.

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதல், மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தல், கிழக்கில் இடம்பெறும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களின் படுகொலை மற்றும் மலையகத்தில் இடம்பெறும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தல் ஆகிய நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்னெடுத்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப்பேரணி ஒன்றை நடத்துவதற்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாங்கள் யாரையும் தாக்கவில்லை: ஊடகச் செய்திகள் பொய்யானவை

### சமாளிக்கிறார் அமைச்சர் ஜெயராஜ்

கொழும்பு,ஜூன்9

நாடாளுமன்றத்தில் நாங்கள் யாரையும்தாக்கவில்லை. தொலைக் காட்சியினூடாகவும், செய்தி ஊடகங்கள் வாயிலாகவும் பரப்பப்பட்டு வரும் செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை.

வண.கொலன்னாவ சுமங்கள தேரர், வண.அக்மீமன தயாரத்ன தேரர் ஆகிய இருவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் சூழ்ச்சிக்கு அடி பணிந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

- இவ்வாறு நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றில் நேற்று காடைத்தனம்!

# ஆளுங்கட்சி எம்.பிக்கள் அட்டகாசம்!!

## பிக்குவைத் தூக்கிப் பிடித்து பந்தாடிய கேவலம்; செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓடினார் பிரதிஅமைச்சர்



நாடாளுமன்றத்தில் நேற்று...

கொழும்பு,ஜூன்9

**நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டதுடன் காடைத்தனமும் இடம்பெற்றது.**

**ஆளுங்கட்சி எம்.பிக்கள் பண்பாடு அற்றமுறையில் அட்டகாசத்தில் ஈடுபட்டதால் நாடாளுமன்று அல்லோலகல்லோலப்பட்டது.**

**ஹெல உறுமயவின் புதிய எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்யவந்த வணக்கத்துக்குரிய தேரர் ஒருவரை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலவந்தமாகத் தூக்கி அங்குமிங்குமாக இழுத்தடித்துப் பந்தாடினர்.**

**ஆளுங்கட்சி உறுப்பினர்களின் இந்த அட்டகாசத்தின் போது புதிய எம்.பியான தேரரின் ஆடைகளைக் களையவும் முயற்சிக்கப்பட்டது. இந்தக் களேபரத்தின் நடுவே சபாபீடத்திலிருந்த செங்கோலைத் தூக்கிக்கொண்டு ஓடிய ஆளுங்கட்சியின் அமைச்சர் ஒருவர் அதனை எங்கோ ஒளித்துவிட்டார். பின்னர் பிற்பகலில் அது மீட்கப்பட்டது.**

இலங்கை நாடாளுமன்றத்தின் வரலாற்றில் மோசமான குழப்பம் என்று கொள்ளப்படும் இந்த அட்டகாசத்தின மத்தியில் பிரஸ்தாப தேரர் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஆளுங்கட்சியினரின் அடாவடித்தனங்களாலும் எதிர்க்கட்சியினரின் பதில் நடவடிக்கைகளாலும் நாடாளுமன்றம் நேற்று அமளிதுமளிப்பட்டது. அமைச்சர்களும் உறுப்பினர்களும

(2ஆம் பக்கம் பார்க்க)

## பாதிப்புற்ற இரு பிக்கு எம்.பிக்களும் உடன் வைத்தியசாலையில் சேர்ப்பு

கொழும்பு,ஜூன்9

நேற்று நாடாளுமன்றத்தில் அரங்கேறிய அலங்கோலத்தில் சிக்கிப் பாதிப்புற்ற ஹெல உறுமயவின் இரண்டு பிக்கு எம்.பிக்களும் நேற்று உடனடியாகக் கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

அரச - எதிர்த்தரப்பு எம்பிக்களுக்கு நடுவில் பந்தாடப்பட்ட புதிய எம்.பியான வண.அக்மீமன தயாரத்ன தேரர் தமது நாடாளுமன்றப் பிரவேசதின் முதல்நாளிலேயே ஏற்பட்ட மிக மோசமான அனுபவத்தால் அதிக இரத்த அழுத்தத்துக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப் படுகின்றார் எனவும் -

நாடாளுமன்ற சபா மண்டபத்தில் அவரைக் காப்பாற்றச்சென்ற சமயம் காயமுற்றார் எனக்கருதப்படும் வண. கொலன்னாவை சுமங்கள தேரர் எம்பி. தமது காயத்துக்காக சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார் எனவும் -

அவர்களுடன் தொடர்புடைய் வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்குச் சென்று இரு எம்.பிக்களையும் பார்த்தார்.(க)

## பெரும்பான்மைக்கு வக்கில்லாத அரசு நாடாளுமன்றில் பயங்கரவாதம் புரிகிறது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

"ஜனநாயக ரீதியில் தமது பெரும்பான்மையைக் காட்ட வக்கில்லாத அரசு நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

"அரசு மேற்கொண்டு வரும் நாடாளுமன்றப் பயங்கரவாதத்தை முறியடிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதெனத் தீர்மானித்துள்ளன."

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் பின் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு தேர்தலுக்கு நாம் தயார் ஐ.தே.கட்சியினால் அது முடியுமா?

### சவால் விடுக்கிறது அரசுத்தரப்பு

இன்னுமொரு தேர்தலை சந்திப்பதற்கு நாங்கள் தயார். எம்மோடு போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரா?

இப்படிச் சவால் விடுத்துள்ளது அரசுத் தரப்பு.

வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அசம்பாவிதங்களுக்கு ஐக்கிய தேசியமுன்னணியே காரணம்

### பழிபோடுகிறார் விமல் வீரவன்ஸ

நேற்று நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் அனைத்துக்கும் ஐக்கிய தேசிய முன்னணியே காரணம் என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டினார்.

நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த

(14ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— ... 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.




NSB
NSB
தேசிய சேமிப்பு வங்கி




நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கைகலப்பின் போது காயமடைந்த ஜாதிக ஹெல உறுமய பிக்கு எம்.பிக்களான அத்மீமன தாயரத்ன தேரர், வண.கொலன்னாவை சுமங்கள தேரர் ஆகியோர் ஜயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்ற போது....

# அனுமதியின்றி மரம் தறித்தமை தொடர்பான விசாரணை இன்று

யாழ்ப்பாணம்,ஜுன்9

கல்வியங்காட்டில் உள்ள பாடசாலை ஒன்றில் வாகை மரம் தறித்து விற்பனை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணை இன்று காலை 9 மணிக்கு யாழ் கல்விவலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபர், முறைப்பாட்டாளர்கள் எனப் பலர் இந்த விசாரணையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் பணிப்பிற்கமைய மேற்படி விசாரணைகள் முதற்கட்டமாக இடம்பெறவுள்ளதாக கல்விவலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். கல்வி வலயத்துக்கு மாகாணக் கல்வி அமைச்சுக் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-ரி)

# வெவ்வேறு விபத்துக்களில் மூன்றுபேர் காயமுற்றனர்

தென்மராட்சி,ஜுன்9

பறவைக் காவடி எடுத்தவரை ஆலயத்தில் இறக்கி விட்டுத் திரும்பிய உழவு இயந்திரம் வளைவொன்றில் திரும்பியபோது பெட்டி தடம் புரண்டதில் நடந்து சென்ற இளைஞர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் போக்கட்டி அம்மன் கோயில் விசாகப் பொங்கல் உற்சவத்தையிட்டுப் பறவைக் காவடி எடுத்தவரை ஆலயத்தில் இறக்கிவிட்டு வரும்போது இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த முருகையா கிருஷ்ணகுமார் (வயது21) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, லொறியின் கீழ் படுத்திருந்தவர் மீது அதன் சில்லுகள் ஏறியதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் மந்துவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதி ஆலயமொன்றில் நடைபெற்ற திருவிழாவினைப் பார்த்துவிட்டு லொறியினை எடுத்த போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த நல்லையா பாஸ்கரன் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

உழவு இயந்திரப்பெட்டியில் ஏற்றப்பட்ட கதிகால் மீது அமர்ந்திருந்த இளைஞர் தவறிவீழ்ந்து காயமடைந்த சம்பவம் நேற்றுக்காலை கச்சாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் நாகேந்திரன் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்.(10-117)

## பட்டப்பகலில் ஆள்களற்ற வீட்டில் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜுன்9

உறவினர்களை விசாரிப்பது போல நடித்த நபர், ஆள்கள் இல்லாத வீடொன்றில் பட்டப்பகலில் புகுந்து அங்கிருந்த பெறுமதி மிக்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை கொக்குவில் மேற்குப் பகுதியில் திருமதி ரவீந்திரன் மாலினி என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த தாலிக்கொடி, அட்டியல், சங்கிலி மற்றும் காப்பு போன்ற நகைகளே திருட்டுப் போயுள்ளன. திருட்டுப்போன நகைகளின் பெறுமதி சுமார் 2 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்ற பாணியில் அண்மைக்காலமாக யாழ்நகரப் பகுதிகளில் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பொலீஸார் எச்சரித்துள்ளனர். (எ-9-6)

# கிழக்கு கொலைகளைக் கண்டித்து திருமலையில் இன்று கதவடைப்பு

ஊடகவியலாளர் ஜிநடேசன், பேராசிரியர் தம்பையா ஆகியோர்களின் படுகொலைகளைக் கண்டித்து இன்று திருகோணமலையில் பூரண கதவடைப்புச் செய்யுமாறு தமிழ் மக்கள் பேரவை கேட்டுள்ளது.

இது குறித்து திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் நடேசன், பேராசிரியர் தம்பையா ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்தும் -

சமாதானத்தை முன்னெடுப்பதாகக் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புப் படையினரும், தமிழ்த் தேசியத்துக்கு எதிரான தேசவிரோதக் கும்பலும் ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்துகின்ற சகல சதிகார நடவடிக்கைகளைக் கண்டித்தும் -

ஸ்ரீலங்கா அரசு கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஓர் அராஜக சூழ்நிலையை அரங்கேற்ற எடுக்கின்ற நடவடிக்கைகளைக் கண்டித்தும் -

இன்று புதன்கிழமை பூரண கதவடைப்புச் செய்து திருகோணமலை மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட கண்டனத்தை வெளிப்படுத்துமாறு கோருகிறோம் - என்றுள்ளது.

இன்று அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்விக் கூடங்கள் போன்றவற்றை மூடி போக்குவரத்துகள் யாவற்றையும் நிறுத்தி, ஒத்துழைப்புத்தரும்படியும், எவ்விதமான வன்செயலுக்கும் இடந்தர வேண்டாம் என்றும் அதில் மேலும் கேட்கப்பட்டுள்ளது. (க)

# நாடாளுமன்றில் நேற்று காடைத்தனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஷ்டியை முறுக்கிக்கொண்டு இழுபறிப்பட்டனர்.

பௌத்த மதகுருவின் புனித அங்கியை துச்சாதனன் பாணியில் களைய முயன்றனர் ஆளும் கட்சியினர். பதவிப் பிரமாணம் செய்யவந்த பௌத்த குருவானவரை பந்தாடுவது போல் அங்கும் இங்கும் தூக்கி இழுத்தடித்தனர் அவர்கள். இந்தக் களேபர நிலையைப் பயன்படுத்திய பிரதி அமைச்சர் ஒருவர் செங்கோலைத் தூக்கிக் கொண்டு சபையைவிட்டு ஓடினார். இதனால் சபை அமர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

செங்கோல் இன்றியே தேசிய ஹெல உறுமய உறுப்பினரான அத்மீமன தயாரத்ன தேரர் - கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் - புதிய எம்.பியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்றுக்காலை பத்து மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.கே.எம்.லொக்கு பண்டார தலைமையில் சபை கூடியது.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின் புதிதாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொள்ள வேண்டிய நேரம் வந்தது.

அப்போது தேசிய ஹெல உறுமய உறுப்பினரான வண ரத்தொளுவ ரத்னசீத தேரர் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதால் அவ்விடத்திற்கு நியமிக்கப்பட்ட வண.அத்மீமன தயாரத்ன தேரர் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் என சபாநாயகர் அறிவித்தார்.

இதனை ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸவும் கடுமையாக ஆட்சேபித்தனர்.

"தன்னைப் பலவந்தப்படுத்தியே ராஜினாமாச் செய்யவைத்தனர் என ரத்தொளுவ ரத்னசீக கூறுகிறார். ஆகவே, இந்த இராஜினாவை ஏற்றுக கொள்வதை நாம் ஆட்சேபிக்கின்றோம். பலவந்தமாகப் பெறப்பட்ட இராஜினாமாச் செல்லுபடியாகாது. எனவே, தனது இடத்திற்கு வேறு ஒருவரை நியமிக்கமுடியாது. சத்தியப்பிரமாணம் செய்யவும் அனுமதிக்க முடியாது என அவர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஒன்றைப் பெற்றுள்ளார்.

நீதிமன்றத்தின் தடை உத்தரவையும் மீறி புதியவர் ஒருவர் பதவிப் பிரமாணம் செய்யமுடியாது; இதனை அனுமதிக்கமுடியாது" என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆட்சேபனை கிளப்பினார்.

ஆனால், நீதிமன்றத்தின் தடை உத்தரவு இதுவரை தனக்குக் கிடைக்கவில்லை. நீதிமன்ற உத்தரவு கிடைக்காத வரை தன்னால் எதுவும் செய்ய முடியாது எனச் சபாநாயகர் பதிலளித்தார்.

அப்போது ஆளும் தரப்பினர்கள் கூச்சல் எழுப்பி குழப்பம் செய்தனர்.

இவற்றைப் பொருட்படுத்தாமல் அத்மீமன தயாரத்ன தேரரைப் பதவிப்பிரமாணம் செய்ய அழைத்தார் சபாநாயகர்.

சபாநாயகரின் கட்டளைக்கமைய படைக்கல சேவிதர் அத்மீமன தேரரை சபாபீடம் நோக்கி அழைத்தார்.

அப்போது திடீரென ஆசனத்தில் இருந்து பாய்ந்து வந்த விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தேரரைக் கட்டிப்பிடித்து மல்லுக்கட்டி இடைமறித்தார். அவருடன் ஜே.வி.பி. உறுப்பினர்களும் சேர்ந்துகொண்டனர். சபை நடுவில் பெரும் கூட்டம் கூடியது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சபை நடுவே விரைந்து தேரரைப் பாதுகாப்பாக சபாபீடத்தின் முன் அழைத்துச் செல்ல முயன்றனர்.

இதனால், இருதரப்பினருக்கும் இடையில் இழுபறிகள் ஏற்பட்டன. அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, முன்னாள் சபாநாயகர் மைக்கல் ஜோசப் பெரேராவின் சட்டையைப் பிடித்துக் கொண்டார். அந்தச் சமயத்தில் அடிவிழும் சத்தம் ஒன்று கேட்டது.

எங்கே யார் யாருக்கு அடித்தார் என்பது எவருக்கும் புரியவில்லை. இருதரப்பு இழுபறிகளுக்கு மத்தியிலும் கைப்பரிமாறல்கள் இடம்பெற்றன.

சத்தியப்பிரமாணம் செய்ய வந்த தேரர் இரண்டு பக்கத்திற்கும் நடுவில் சிக்கி இழுபட்டார். அவருடைய காவி உடையும் அலங்கோலமாக இழுபட்டுத் தொங்கியது அமைச்சர்களும உறுப்பினர்களும் முட்டி மோதிக் கொண்டனர்.

இப்படி சபை அல்லோலகல்லோலப்பட்டபோது முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் எதிர்க்கட்சி ஆசனங்களுக்கு ஊடாக அத்மீமன தயாரத்ன தேரரைப் பாதுகாப்பாக சபாபீடத்திற்கு அழைத்து வந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஜே.வி.பியினரும் சபாபீடத்தை சுற்றிவளைத்துக் கொண்டு தேரரை சபை பீடத்திற்கு செல்ல விடாமல் தடுத்து மல்லுக் கட்டினர். அப்போது கலாசார தேசிய விழுமியங்கள் அமைச்சர் விஜித ஹேரத் (ஜே.வி.பி.) அத்மீமன தேரரின் காவியைப் பிடித்து இழுத்தார். அமைச்சரின் கைகளில் பாதி தேரின உடலில் மீதிஎன்று எப்படியோ காவி உடைகளையப்படாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாதுகாத்துவிட்டனர். சந்தடிகளுக்கு மத்தியில் தேரர் பதவிப் பிரமாணம் செய்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மோதல்களைத் தடுப்பதில் படைப்பல சேவிதரும் உதவியாளர்களும் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சபாபீடத்தில் இருந்த செங்கோலைத் தூக்கிக்கொண்டு சபைக்கு வெளியே ஓட்டம் பிடித்தார்.

இதனைத் தூர இருந்து அவதானித்த பிரதி படைக்கல சேவிதர் பிரதியமைச்சரை விரட்டிச் சென்றார். என்றாலும் அவரால் செங்கோலைக் கைப்பற்ற முடியவில்லை.

இந்நிலையில், சபையில் மேலும் அமளிதுமளிக் குழப்பம் ஏற்பட்டது. செங்கோலை மீண்டும் சபாபீடத்தில் கொண்டுவந்து வைக்கும்படி சபாநாயகர் பலமுறை அறிவித்தும் அதனை ஆளும்கட்சியினர் எவரும் ஏற்கவில்லை.

சபாபீடத்தில் செங்கோல் இல்லாமலேயே எதிர்க்கட்சியினரும் படைக்கல சேவிதர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் சூழ நிற்க அத்மீமன தயாரத்ன தேரர் கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, தேரருக்கு பக்கபலமாக நின்றார். அப்போதும் ஆளும்கட்சியினர் சபை நடுவில் இருந்து ஆரவாரம் செய்துகொண்டேயிருந்தனர்.

**சபையில் அமைதி குலைந்தது**

செங்கோலைக் கொண்டுவந்து வைக்கும்படி சபாநாயகர் பலமுறை வேண்டுகோள் விடுத்தார் பயனில்லை. எனவே, சபையை பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார். அப்போது மணி காலை 10.35.

பதினைந்து நிமிடங்களின் பின் சபாநாயகர் மீண்டும் சபைக்கு வந்தார். அப்போதும் செங்கோல் கொண்டு வந்து வைக்கப்படவில்லை. எனவே, மீண்டும் சபையை ஒத்திவைப்பதாகக் கூறி, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதனைப் பேசித் தீர்க்கலாம் என்று தெரிவித்து சபாநாயகர் எழுந்து சென்றார்.

பிற்பகல் 2.17 மணியளவில் சபை கூடியது. அப்போது செங்கோல் சபையில் இருந்தது. சபையை ஜுலை 20 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

மேலும், மூன்று புதிய எம்.பிக்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்வதற்குக் காத்திருந்தனர். ஆனால், முதலாவது பிக்கு எம்.பியின் சத்தியப்பிரமாணத்தோடு சபை அமளிதுமளிப்பட்டு அடுத்த அமர்வு ஜுலை 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதால் அம்மூவரும் அதுவரை காத்திருக்க வேண்டியேற்பட்டுள்ளது.

# யாழ்.சுகாதாரத் தொண்டர்கள் அமைய ஊழியர்களாக நியமனம்

யாழ். மாவட்டத்தில் நீண்ட காலமாகச் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோருக்கு அமைய சுகாதாரத் தொழிலாளர் பதவி வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான அனுமதி திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளரினால் யாழ்.சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சுகாதாரத் தொண்டர்களின் சேவைக்காலம், கல்வித் தகைமை, வயது ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்தே இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் இவர்களுக்கான நேர்முகத்தேர்வு விரைவில் நடத்தப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (10-135)

# ஆறுமுகனுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு திடீர் வாபஸ்!

## இப்போது ஆக 2 பொலீஸார் மட்டுமே

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் எம்பியுமான ஆறுமுகன் தொண்டமானுக்கான பாதுகாப்பு திடீரென குறைக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை அவருக்கு வழங்கப்பட்டு வந்த அமைச்சர் நிலைப் பாதுகாப்பு நேற்றுமுன்தினம் திடீரென வாபஸ் பெறப்பட்டது.

சாதாரண நாடாளுமன்ற உறுப்பினருக்கான பாதுகாப்புக்கு வழங்கப்படுவது போன்று ஆறுமுகன் தொண்டமானுக்கும் ஆக இரண்டு பொலீஸார் மட்டும் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அரசுப் பக்கம் சாய்க்கும் அரசுதரப்பினரின் முயற்சி தோல்வியில் முடிந்ததை அடுத்தே, இந்தத் திடீர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு ரீதியாக அழுத்தம் கொடுப்பதன் மூலம் ஆறுமுகன் தொண்டமானையும் அவரது கட்சியினரையும் வழிக்குக் கொண்டு வர அரசு உயர் வட்டாரங்கள் எண்ணுகின்றன போலும் என அவை தெரிவித்தன.

# மகாநாயக்கரின் இறுதிக் கிரியைகள் அரச மரியாதைகளுடன் ஞாயிறன்று

காலஞ்சென்ற மல்வத்தை பௌத்த பீடத்தின் மகா நாயக்கர் வண. ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி தேரரின் இறுதிக் கிரியைகள் பூரண அரச மரியாதைகளுடன் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொலீஸ் மைதானத்தில் இடம்பெறும்.

அன்றையதினம் பிற்பகல் 2.30 மணியளவில் மகா நாயக்கரின் பூதவுடல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில ஊர்வலமாக பொலீஸ் மைதானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த நிகழ்வில் மல்வத்தை பீட சிரேஷ்ட குருமார்கள், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்துவார்கள். பிற்பகல் 4.30 மணிக்கு இராணுவப் படையினர் 21 மரியாதைக் குண்டுகளைத் தீர்ப்பர். அதன் பின்னர் சிதைக்குத் தீ வைக்கப்படும்.

இந்த நிகழ்வுகளையொட்டி கண்டியில் அன்றையதினம் மதுபானசாலைகள், இறைச்சிக் கடைகள் என்பனவும் மூடப்படும்.

இந்தியா, பர்மா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளில் இருந்தும் அரச பிரதிநிதிகள் வந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.(க)

### பாப்பரசரின் 103ஆவது வெளிநாட்டுப் பயணம்



பாப்பரசர் ஜோன்போல் சுவிறஸர் லாந்துக்கு 2 நாள் சுற்றுப்பயணம் செய்தார். அங்கு சுவிற்ஸர்லாந்தின் அதிபர் ஜோசப் டெய்சையும் அவர் சந்தித்துப் பேசினார்.

பெர்ன் நகரில் அவர் நடத்திய சிறப்புப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். 84 வயதான பாப்பரசர் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது இது 103 ஆவது தடவையாகும். (8)

# அமெரிக்க விமானச் சேவைகளே எமது புதிய தாக்குதல் இலக்குகள்!

## மீண்டும் மிரட்டுகிறது அல்கெய்டா

நியாத்,ஜூன்9

அமெரிக்கா மற்றும் மேலைநாட்டு விமான சேவைகளும் போக்குவரத்து சாதனங்களுமே எமது புதிய தாக்குதல் இலக்குகளாக இருக்கும் என்று சவூதி அரேபியாவைத் தளமாகக் கொண்டிருக்கும் அல்கெய்டா தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எல்லா வாகனங்களும், தளங்களும் போக்குவரத்து வசதிகளும் குறிப்பாக மேற்கத்தைய மற்றும் அமெரிக்க விமான சேவைகளும் எமது நேரடித் தாக்குதல்களுக்குள்ளாகும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

அல்கெய்டா ஆதரவு இணையத் தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலில் மேற்குலகவாசிகளின் கட்டடங்களிலிருந்தும் ஒதுங்கிக் கொள்ளும்படியும் முஸ்லிம்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிக்கையின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை ஆனால் 'அரேபியக் குடாவிலுள்ள அல்கெய்டா' என அதில் கையெழுத்திடப்பட்டிருந்தது.

பி.பி.ஸி. செய்தியாளர்கள் குழு ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலையடுத்து துப்பாக்கிதாரிகளைக் கண்டு பிடிப்பதில் சவூதி அரேபியப் பொலீஸார் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் வேளையில் இப்புதிய அல்கெய்டா எச்சரிக்கை வந்துள்ளது.

விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று வந்திருக்கும் எச்சரிக்கை எல்லாத்தரப்பினரையும் உஷார்படுத்தியுள்ளது.



சவூதி அரேபியாவில் இன்னொரு தாக்குதல் நடக்குமானால் எண்ணெய் வளநாடான அதன் மீது மேற்கு நாடுகள் வைத்திருக்கும் நம்பிக்கை சிதறிப்போகக் கூடும் என்று கருதப்படுகின்றது.

சவூதி அரேபிய எண்ணெய்த் தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான அரேபிய இனத்தவர்களும் மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவர்களும் பணிபுரிந்து வருகின்றனர். (4-8)

## வடக்கு ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்: மோசுலின் நகரமேயர் மயிரிழையில் தப்பினார்

வட ஈராக் நகரமான மோசூலில் மேயர் காரியாலயத்தின் முன்னால் நடந்த தற்கொலைக் கார்குண்டுத் தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 110 பேருக்கு மேல் காயமடைந்துள்ளதாக அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை வீதியில் மக்கள் கூட்டம் நெரிசலாக இருந்த வேளையில் இந்தக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இச்சம்பவத்தில் குறைந்தது 9வாகனங்கள் சிதறடிக்கப்பட்டுவிட்டன இறந்தவர்களின் சில சடலங்கள் அடையாளம் காணமுடியாதபடி சிதைந்து போயுள்ளதாக டாக்டர்கள் கூறுகின்றனர்.

நகரபிதாவும் உள்ளூர் மாகாண பாதுகாப்பு ஆணையாளருமான சாலெம் அல்-ஹஜ்சிலாவைக் குறிவைத்தே இநதத் தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் ஆயினும், அவர் எவ்வித காயமும் இன்றித் தப்பிவிட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாக்குபா நகரில் அமெரிக்கத் தளத்துக்கு முன்னால் இதற்குச் சறறு முன்னர் இடம்பெற்ற ஒரு கார்க் குண்டுவெடிப்பில் குறைந்தது 5 பேர் கொல்லப்பட்டனர். இதில் அமெரிக்கப் போர் வீரர் ஒருவரும் 9 பேருக்கு மேற்பட்டோரும் காயமடைந்தனர்.

மோசுல் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு மேயரும் அவரது சகாக்களும் காரில் பவனியாக வந்து அவ்விடத்தைக்கடக்கும் போது நடத்தப்பட்டுள்ளது. பொலீஸ் பிரதம அதிகாரியும் காரில் இருந்துள்ளார்.

அவர்கள் இலேசான காயங்களுக்குள்ளாகி சிகிச்சையின் பின்னர் உடனடியாகவே வேலைக்குத் திரும்பி விட்டதாகக்கூறப்பட்டது.

மேயரின் பல பாதுகாப்பு அதிகாரிகள் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-8)



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றீகனின் பூதவுடல் பூரண இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்படும் காட்சி.

## இந்தியாவில் சாரஸ் விமானத்தின் 2ஆவது சோதனையும் வெற்றி!

பெங்களூர்,ஜூன்.9

'சாரஸ்' பயணிகள் விமானம் 2ஆவது முறையும் பறக்கவிடப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட முதல் பயணிகள் விமானம் 'சாரஸ்'. இந்த விமானம் கடந்த மே29ஆம் திகதி பெங்களூர் எச்.ஏ.எல். தளத்தில் வெற்றிகரமாகப் பறக்கவிடப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

தற்போது 2ஆவது முறையாக பெங்களூர் எச்.ஏ.எல். விமானத்தில் கடந்த திங்கட்கிழமை வெற்றிகரமாக பறக்கவிடப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. அது 20 நிமிடங்கள் பறந்து தரை இறங்கியது.

பைலட் கே.கே.வேணுகோபால், வங்கொமாண்டர் ஆர்.மகர் ஆகியோர் விமானத்தை ஓட்டினர். பகல் 1.45 மணிக்கு விமானம் விண்ணில் பறக்கத் தொடங்கி பிற்பகல் 2.05 இற்கு தரை இறங்கியது.

மெர்சிடஸ் கார் ஓட்டுவது போல் இந்த 'சாரஸ்' விமானத்தை ஓட்டினேன் என்றார் பைலட் வேணுகோபால்.

பெங்களூரிலுள்ள நஷனல் ஏரோஸ்பேஸ் லபோரேட்டரீஸ் என்ற கம்பனி (என்.ஏ.எல்.) இந்த விமானத்தை வடிவமைத்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் முன்னிலையில் இம்மாத இறுதியில் இந்த விமானம் மீண்டும் விண்ணில் பறக்க விடப்பட்டு முறைப்படி சோதனை நடத்தப்படவுள்ளது. (8)

## அப்பலோ ஆஸ்பத்திரியில் நடிகர் ரஜனிகாந்த் அனுமதி

### உதட்டில் சத்திர சிகிச்சை

சென்னை,ஜூன்.9

நடிகர் ரஜனிகாந்த் நேற்று முன்தினம் இரவு திடீரென்று சென்னை அப்பலோ ஆஸ்பத்திரிக்கு சென்றார். அங்கு டாக்டர்கள் அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்தனர்.

பின்னர் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

ரஜனிகாந்துக்கு உதட்டில் வெள்ளைப் புள்ளிகள் உள்ளன.

ஓகஸ்ட் மாதம் "ஜக்குபாய்"பட சூட்டிங் தொடங்க உள்ளதால் அதற்கு பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மூலம் உதட்டை சரி செய்ய ரஜனி முடிவு செய்துள்ளார்.

எனவேதான் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ரஜனியின் உதட்டில் இன்று சத்திரசிகிச்சை நடக்கலாம் என்று தெரிகிறது.

உதட்டுச் சிகிச்சை முடிந்ததும முக சீரமைப்பிலும் ரஜனி ஈடுபட உள்ளார்." வெளிநாட்டைச் சேர்ந்த பிரபல மேக்கப் நிபுணர்கள் மூலம் முகத்தை அழகுபடுத்தவுள்ளார். இவை முடிந்த பிறகு "ஜக்குபாய்"பட வேலைகளை ரஜனி ஆரம்பிக்கிறார். மற்றப் படங்களை விட ஜக்குபாயில் வித்தியாசமான தோற்றத்தில் நடிக்கவே இதையெல்லாம் அவர் செய்து கொள்வதாகப் பேசப்படுகிறது. (8)

## தம்மைத் தற்காத்துக் கொள்ள துப்பாக்கி வாங்கும் பெண்கள்

லக்னோ,ஜூன்9

கற்பழிப்பு, கொலை ஆகியவற்றில் இருந்து தற்காத்துக்கொள்ள துப்பாக்கி வாங்கும் குடும்பப் பெண்களின் எணணிக்கை அதிகரித்து வருகிறது. இந்தியாவின் லக்னோவில் ஓர் ஆண்டில் 100 பெண்கள் துப்பாக்கி அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளனர்.


உத்தரபிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல்போன்ற குற்றங்களுக்குக் குறைவில்லை. பொதுமக்கள் தங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்றே கருதுகிறார்கள். அதிலும் குறிப்பாகப் பெண்கள் தங்களுககுப் பாதுகாப்பு இல்லாத நிலையை உணர்கிறார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் பெண் கவிஞர் மதுமிதா கொலையைத் தொடர்ந்து இந்தப் பயம் அவர்களுக்கு அதிகமாகவே ஏற்பட்டுள்ளது.

கற்பழிப்பு, கொலை, கடத்தல், கொள்ளை ஆகியவற்றில் இருந்து தப்ப தங்களுக்குத் துப்பாக்கியே துணை என்ற முடிவுக்கு பெண்கள் வந்துவிட்டார்கள். லக்னோ உட்பட பல்வேறு நகரங்களில் துப்பாக்கி வைத்துக்கொள்ளும் குடும்பப் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

லக்னோவில் கடந்த ஓர் ஆண்டில் 736 பேருக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு இருக்கிறது. இதில் 100பேர் பெண்கள்.

கணவன் மற்றும் உறவினர்கள் வெளியூர் செல்லும்போது, வீட்டில் தனியாக இருக்கும்போது இந்தப் பெண்கள் துப்பாக்கியைத்தான் துணையாகக் கொள்கிறார்கள். (8)





வெள்ளிக்கிரகம் நேற்று நேர் கோட்டில் சூரியனைக் கடந்துசென்றது. சூரியனின் ஒரு பகுதியூடாக சிறிய புள்ளி வடிவில் வெள்ளிக் கிரகம் கடப்பதையும், இந்த அரிய காட்சியை இந்தியாவிலுள்ள பாடசாலை மாணவர்கள் தொலைநோக்கி மூலம் ஆர்வத்துடன் பார்வையிடுவதையும், பொதுமக்கள் 'வெல்டிங்' வேலை செய்யும்போது கண்களுக்குப் பாதுகாப்பாக அணியும் கண்ணாடி மூலம் இந்தக் காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். உலகெங்கிலுமுள்ள பலகோடி மக்கள் 122 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த அரிய காட்சியை ஆவலுடன் பார்த்து வியந்தனர்; கண்டு ரசித்தனர்.

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

முருகைக் கற்பாறைத் தொடர்கள் உலகில் 109 நாடுகளைச் சூழத் தடுப்பு அரண்களாக விளங்குகின்றன. இவை கடல் அலைகள், புயற்கொந்தளிப்புகளைத் தாங்கிக் கரையோரம் வாழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஒறிஜினல் இத்தாலியன் வெஸ்பா ஸ்கூட்டர் (செல்வ் ஸ்ராட் மொடல்) உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, பஸ் நிலையம், யாழ்ப் பாணம். (32864)

நல்ல நிலையிலுள்ள 8ஸ்ரீ 5497 இலக்கமுடைய "பேர்ஜோ" கார் விற் பனைக்குண்டு. தொடர்பு:சுவாமி சித் ரூபானந்தா, சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.T.P.:226 3465.(32833)

Sony T.V. (பாவித்தது) K.V. 2183/82 -ரூபா 14,500/-,Sony ரேடியோ கசெற் CFS 1085-ரூபா 3500/- இரண் டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.மகேஸ்வரன், K.K.S. வீதி (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம். (32839)

பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் பகிரா இன புறொ யிலர் குஞ்சுகளும் இன்று 09.06.2004 புதன் மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற் கொள்ளவும். தொடாபு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No: 3529, 2867,. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32771)

27/17, புங்கங்குளம் வீதி, கொழும புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டை மாடியுடன - சமுர்த்தி வங்கிக்கு முன் ஒழுங்கை யில்) நல்ல சூழலில் வாகனத் தரிப் பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (சி-35429)

## சோதிடம்

உங்கள் கல்வி, தொழில் விவாகம், நோய் தொடர்பான வினாக்களுக்கு உரிய விடை உடனே தரப்படும். ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞா னம் மூலமாகப் பலன் சொல்லப்படும். உங்கள் பிள்ளைகளின் திருமண சேவைக்கும் தொடர்புகொள்ளலாம். டாகடர் த.சிவானந்தன், பிரபல சோதி டர், 264, பலாலி வீதி, கந்தர்மடம். (பேபி போட்டோ முன்பாக). (32839)

## தவறிவிட்டது

அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்த லிகிந்தினி குலக்கொழுந்து என்ப வருடைய தே.அடையாள அட்டை (இல.795344071 - V), வி.அடையாள அட்டை (இல.0903039693) ஆகி யன கடந்த 31-05-2004 அன்று வற் றாப்பளை அம்மன் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0777-250885. (32842)

## திருமண சேவை

1962ஆம் ஆண்டு, 45 பாவம், செவ் வாய்க்குற்றமற்ற, சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு அழ கான 10வயது வித்தியாசத்தில் மண மகள் தேவை. மேலும், சகல வித மான வரன்களும் எம்மிடம் உள்ள னா. தொடர்பு: 361, கோயில் வீதி, நல லூர், (கமலக்கண்ணன் திருமண சேவை). (32871)

## மணமகள் தேவை

இந்து உயர் கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த, 37 வயதுள்ள, 5"6" உயரமான, சிங்கப்பூரில் உத்தியோகம் பார்த்துவிட்டு அண்மையில் யாழ். வந்த, அழகான மணமகனுக்கு அழ கிய, மெல்லிய, நற்பண்புள்ள, 35வய துக்குட்பட்ட வெளிநாட்டுக்கு பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. தொடர்பு: அ.சத்தியேந்திரன், 89, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. T.P.: 7354. (32849)

## கூட்டம்

யாழ்.மாநகரசபை ஊழியர் சிக் கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தின் 37ஆவது பொதுக்கூட்டம் எதிர் வரும் 12ஆம் திகதி காலை 10மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் சங்கத் தின் தலைவர் செ.மார்லின் பெர் ணாண்டோ தலைமையில் நடைபெற வுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-ரி)

## மணமகன் தேவை

**1966 இல் பிறந்த, அவிட்ட நட்சத்திரம் 2ஆம் பாதம் (மகர ராசி) இந்து கௌரவ குடும்ப மணமகளுக்குப் பொருத்த மான (உள்நாடு/வெளிநாடு) மணமகன் தேவை.**

**தொடர்பு: T.P. 3851**

(32851)

# ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல் கள் திணைக்களமும், யாழ்.மாவட் டப பிராந்திய அலுவலகமும் இணைநது நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 81ஆவது தொடர்நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் "பெண்களும் சமய வாழ்வும்" என்ற பொருளில், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவு ரையாளர் திருமதி கோதை நலகுல ராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (எ-ரி)


## வெளிக்கள உத்தியோகத்தர் தேவை

**காப்புறுதி வரலாற்றில் 40 வருடத்திற்கு மேல் நிலைத்து நிற்கும் அரச ஆதரவு பெற்ற காப்புறுதி ஸ்தாபனத்தில் வெளிக்கள உத்தி யோகத்தராகக் கடமையாற்றி அதிகூடிய வருவாயைப் பெற்றுக்கொள்ள லாம். கணிதம், உட்பட O/L 6 பாடங்களில் சித்தியெய்திய இருபாலாரும் தாமதக்காது 20.06.2004 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.**

**விளம்பர இல. 2293 மே/பா உதயன்.**

(32873)(43-14-19-26)

## பகுதி நேரப் பணியாளர்கள் தேவை

நன்கு ஸ்தாபிக்கப்பட்ட, நீண்டகாலமாக இயங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்குப் பின்வரும் தொழில்புரிவோரிடமிருந்து பகுதிநேர வேலை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ குழாய்பொருத்துநர்
- ★ மின்இணைப்பாளர்
- ★ ஓட்டுநர்
- ★ தச்சுவேலை
- ★ வர்ணப்பூச்சாளர்

விண்ணப்பதாரர் தமது வேலை அனுபவம், தொழிற்பயிற்சி, வயது, இப்போது தொழில்செய்யும் நிறுவனம் ஆகிய விவரங் களைக் குறிப்பிட்டு எதிர்வரும் 22.06.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 2292**

**மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(C/35496)(42-14-19-26)

## புதிக்கடைத் திறப்பு விழா

### (சதீஸ் புத்தகசாலை)

காலம்: இன்று (09.06.2004) புதன்கிழமை

- ✳ CD,CD கவர்கள் மற்றும் அலுவலக, பாடசாலை Stationarys (மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)
- ✳ CD Writting,Phone Cards
- ✳ Hand Phone கள் திருத்திக் கொடுக்கப்படும்.

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி, கோண்டாவில். (32874)(42-14-19-26)

**T.P:0712246469**


## 31ஆம் நாளில் நினைவுகளுடனே...!



மண்ணுக்க 13 - 08 - 1944

விண்ணுக்க 10 - 05 - 2004

### அமரர் செல்லையா பொன்னம்பலம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

*ஒரு மாதமென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது துயரம்*
*அன்புக்கும் நற்பண்புக்கும் இருப்பிடமாக இருந்தீரே!*
*விருட்சமாய் விழுதுவிட்டு வாழ்வில் வேராக இருந்தீரே!*
*நீங்கள் இல்லாத இல்லம் இங்கு தனியாய்த் தவிக்கிறதே!*
*நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் நினைவு மறையாது!*

எமது குடும்பவிளக்கின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், இன்று (09-06-2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மருதங்கேணி வீதி,*
*புலோலி கிழக்கு, பருத்தித்துறை.* (32870)(42-14-19-26) - குடும்பத்தினர்.


Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6237327 முதல் 6248254 வரை
சீட்டிழுப்பு இல. 39 திகதி 07-06-2004

வெற்றி எண்கள் **1 0 3 7 6 7** சுப்பர் எண் **12**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,00,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,00,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 5,000/- | 4,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 977 | 500/- | 4,88,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,735 | 50/- | 4,86,750/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 96,481 | 10/- | 9,64,810/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 1,000/- | 96,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 975 | 100/- | 97,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,649 | 20/- | 1,92,980/- |
| மொத்தம் | 1,18,031 | | 43,61,540/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 43,61,540/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,02,70,700/-**

தொடர் இல. 7212632 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுன 10 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**6242069-1-01**
**6247789-5-44**
**6244841-9-65**
**6246524-5-19**
**6244498-5-26**

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 13 - 01 - 1938

இறப்பு 09 - 06 - 2001

### அமரர் ஜி.எஸ்.பிள்ளை

(ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

"உமது மீட்பை எம் கண்கள் கண்டுகொண்டன" (லூக்: 2:31)

அப்பா! ஆயிரம் இரவுகள் தவமிருந்தாய்
மொட்டொன்று மலராகும் துள்ளிய விநாடிக்காய்....
அந்தப் பொழுதுகளின் மகிழ்ச்சி காயுமுன்னே
கண்களை ஏன் மூடிக் கொண்டாய்?

ஓ! உமது மீட்பை
அந்தக் கண்கள் கண்டு கொண்டனவா?
ஆறுதல் அடைகின்றோம்
ஆண்டுகள் மூன்று மறைந்தாலும்
கண்கள் நிறைந்த சோகம்
ஒரு கல்வாரியின் அனுபவம்
நீ உயிர்ப்பாய் அப்பா -அது உறுதி
காத்திருக்கின்றோம் உம் வரவிற்காய்
எம் குடும்பத்தில்....

*"செல்லம்ஸ்",*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

*தகவல்:* வண.பிதா எஸ்.ஏ.றொஷான் *(மகன்)*

*பிரிவால் வாடும்:* தாய், மனைவி, பிள்ளைகள், மருமகன், உற்றார், உறவினர்.

(32863)(3814-19-26)

உதயன்

# சட்டமாக்கும் சபையில் காட்டுத் தர்பார் !

இப்போதைய நிலைமையில் "வெறுமனே அரசியல் விவகாரங்களை அலசும் 'அரட்டை அரங்கமாக' - பேசிக் கழிக்கும் இடமாக - நாடாளுமன்றம் பயன்படலாம். அந்த அரட்டை அரங்கம் கூட அநாகரிக அரங்கமாக மாறுவது அடிக்கடி நடக்கிறது" - என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதை எழுதிய - அச்சிட்ட - மை காய்வதற்குள் நேற்று நாடாளுமன்றத்தில் அது வெகு ஆணித்தரமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அரசியல் பணியே வேண்டாம் என்று அரசைத் துறந்து - அரசாட்சியைத் துறந்து - பரிநிர்வாண நிலை தேடி - புறப்பட்டு, அதில் சித்தியடைந்தவர் புத்த பெருமான். சகல சௌபாக்கியங்களையும் துறந்து மக்களுக்கு நல்வழிகாட்டியாக - அஞ்ஞானத்திலிருந்து மக்களை விடுவிக்கும் ஒளித்தீபமாக - புறப்பட்டவர் அவர்.

ஆனால், அவர் வழியில் மக்களுக்கு பணியாற்றப் புறப்பட்ட தேரர்களோ இங்கு, மதவழிகாட்டி ஸ்தானத்தை பயன்படுத்தி - கௌதம புத்தர் எதைத் துறந்தாரோ அதை நோக்கி - அரசியலை நாடி - இராச்சிய அதிகாரங்களைத் தேடி - ஓடுகின்றார்கள். அஞ்ஞான இருளிலிருந்து மக்களுக்கு ஒளிகாட்ட வேண்டியவர்கள் ஒளிமய நிலையிலிருந்து தங்களையே இருளுக்கு இழுத்துச் சென்றார்கள்.

அந்த விபரீதம் ஒரு புறம் அரங்கேற - அதன் விளைவாக நாட்டின் கீர்த்திமிக்க உயர்ந்த அமைப்பான நாடாளுமன்றத்தில் - வணக்கத்துக்கும் மதிப்புக்குமுரிய மதத் தலைவர்கள், தேரர்கள் கேவலப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். மிக மோசமான காட்டுமிராண்டித்தனம் வணக்கத்துக்குரிய பிக்குகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

நீதிமன்ற உத்தரவு ஒன்று இருக்கத்தக்கதாக, வணக்கத்துக்குரிய பிக்குவோ, வேறு எவருமோ அதை மீறி நடக்கலாமா என்ற சர்ச்சையில் நாடாளுமன்றில் வன்முறை அநாகரிகம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

இந்தச் சர்ச்சை - சட்டச் சிக்கல், சட்ட முறைமைகளுக்கு அமையக் கையாளப்படவேண்டிய விவகாரம், அதற்குரிய வழிமுறைகள் உள்ளன. அதுவும் நாடாளுமன்றத்தில் இவ்விடயங்களைக் கையாள்வதற்குரிய அதிகாரங்களுடனும், மாண்புடனும் சபாநாயகர் இருக்கின்றார்.

சபாநாயகரை - அவரின் அதிகாரங்களை - நாடாளுமன்ற சம்பிரதாயங்களை - எல்லாம் கேள்விக்குள்ளாக்கி, கேவலப்படுத்தி, அநாகரிகம் புரிந்திருக்கின்றார்கள் கௌரவத்துக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக விளங்கவேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

நீதிமன்ற உத்தரவு ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நீதிமுறையான காரணங்கள் இருந்தும், அது ஒதுக்கப்பட்டிருப்பதாக யாரேனும் பிரஜை - அவர் நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட இருக்கலாம் - கருதினால், அதற்கு நீதிமுறையில் நிவாரணம் பெறுவதற்கு வழியுண்டு; நீதிமன்றங்களே அவற்றைப் பெற்றுத் தரும். அதுதான் சட்டத்தின் ஆட்சி; மாட்சியும் கூட.

நீதிமுறையில் பெறவேண்டிய நிவாரணத்தை வன்முறையில் பெறமுயல்வது சட்டத்தின் - நாட்டின் - ஆட்சி அல்ல. காட்டின் ஆட்சி.

அந்தக் காட்டாட்சியை நாட்டின் சட்டமாக்கும் மிக உயர்ந்த சபையில் கட்டவிழ்த்துவிட்டிருப்பது கேவலத்திலும் கேவலம்!

நாடாளுமன்ற அமர்வு நடந்து கொண்டிருந்த சமயமே, அங்கு மிகு உயர்ந்த கௌரவத்துடன் வைக்கப்பட்டிருந்த செங்கோலை, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் - அதுவும் பிரதி அமைச்சர் ஒருவர் - தூக்கிக்கொண்டு ஓடியிருப்பது எல்லாவற்றிலும் விடவும்; கேவலம். நாடாளுமன்ற ஆட்சி முறையையே அகௌரவப்படுத்தி காலில் போட்டு மிதிக்கும் செயல்.

தனது ஆட்சியைத் தக்க வைப்பதற்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாமல், விரக்தியின் விளிம்பில் அரசு துடித்து, தவித்துக் கொண்டிருப்பதை அண்மைக்காலத்தில் நாடாளுமன்றத்தில் அரங்கேறும் காட்சிகள் உறுதிப்படுத்தி வருகின்றன.

சபாநாயகர் தெரிவில் அப்பதவியை எதிரணியிடம் அரசுத் தரப்பு கோட்டைவிட்டபோதே இந்த நாடாளுமன்றத்தைக் கொண்டு நடத்துவதில் புதிய சபாநாயகர் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப்போகின்றார் என்பது தெளிவாகிவிட்டது.

அந்த நெருக்கடியின் ஆரம்ப அத்தியாயங்கள்தாம் இப்போது சபையில் அரங்கேறி வருகின்றன.

சட்டத்தை ஆக்கும் நாட்டின் உயர்ந்த பீடமே சட்டத்தை அகௌரவப்படுத்தும் சண்டைக் களமாக மாறி வருவது அந்தச் சபைக்கு மாத்திரமல்ல, முழு நாட்டுக்குமே மோசமான பெயரைச் சம்பாதித்துத் தருகின்றது.

மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்வோரே இத்தகைய அராஜகத்தை - காட்டுத் தர்பாரை - நடத்துவதுதான் வேதனையிலும் வேதனை.

# நகரில் மோட்டார் சைக்கிள் திருடும் குழு: பொலீஸ் பொறுப்பதிகாரி அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ். நகரப் பகுதியில் நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களை சாதுரியமாகத் திருடும் குழு ஒன்று நடமாடுகின்றது. எனவே, தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தும் பொதுமக்கள் அதைக் கண்காணிக்கவும் வேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தல் ஒன்றை யாழ்.பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு சப் இன்ஸ்பெக்டர் விக்கிரமரத்ன விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நகரப் பகுதியில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

நிறுத்தப்படும் சைக்கிள்களின் வயர்களை வெட்டி லாவகமாக அவற்றைக் கடத்திச் செல்லும் சம்பவங்கள் இடம்பெறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இவ்வாறு மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கடத்த எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது. இது விடயமாக இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் பாடசாலை மாணவர்கள். அவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கப் பொதுமக்களின் ஆதரவு தேவை. மோட்டார் சைக்கிள்களின் 'ஹாண்டில்'களைப் பூட்டுவதுடன், விசேட பூட்டுக்களையும் போடவேண்டும்.

அத்துடன், சைக்கிளை நிறுத்துவதுடன், அவற்றைக் கண்காணிக்கவும் வேண்டும். - என்று அவர் கேட்டுள்ளார். (எ-3)

# வேலைக்கு விண்ணப்பித்த சகல பட்டதாரிகளுக்கும் அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்புக் கிடைக்கும்

## திறைசேரியின் செயலாளர் சொல்கிறார்

கொழும்பு,ஜூன்9

வேலை கோரி விண்ணப்பித்திருக்கும் சகல வேலையற்ற பட்டதாரிகளுக்கும் அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர இவ்வாறு தெரிவித்துள்ளார் என கொழும்பில் இருந்து வெளிவரும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் பட்டதாரிகளுக்கான இந்த நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நியமனங்கள் தொடர்பாக, எதுவிதமான அரசியல் தலையீடுகளும் இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே, அரச துறைகளில் பெருமளவு வேலைவாய்ப்புகள் உள்ளன. மேல்மாகாண சபையில் மாத்திரம் 12ஆயிரம் வேலைவாய்ப்புகளும் கல்வியமைச்சில் மேலும் 9ஆயிரம் வேலைவாய்ப்புகளும் உள்ளன. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்களது தகுதிகள் பரீட்சிக்கப்படும். அதன்பின்னர் வேலையற்ற சகலருக்கும் வேலை வாய்ப்புகளை வழங்குவதே அரசின் தீர்மானமாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இடம்பெயர்ந்து வசித்து வரும்

# வடமராட்சி கிழக்குக் குடும்பங்களை கற்கோவளத்தில் குடியமர்த்த ஏற்பாடு

கரவெட்டி,ஜூன்9

வடமராட்சி கிழக்கில் இருநது இடம்பெயர்ந்த குடும்பங்களை கற்கோவளம், குடத்தனை ஆகிய பகுதிகளில் உள்ள அரச காணிகளில் குடியமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தும்பளை புனர்வாழ்வு, புனரமைப்புக் கட்டடத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். செயலக மீள்குடியேற்றத் திட்டப்பணிப்பாளர் எஸ்.ஞானசேகரம், கடற்புலிகளின் வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் கல்யாணி, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா, கடற்புலிகளின் வல்வெட்டித்துறைப் பொறுப்பாளர் அன் பரசன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து தும்பளை லூர்த்து மாதா கோயிலடி, கற்கோவளம் லட்சுமணன் தோட்டம் ஆகிய இடங்களில் வாழும் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கற்கோவளம், குடத்தனை ஆகிய பகுதிகளில் உள்ள அரச காணிகளில் வீடுகளை அமைத்து இந்த மக்களை மீளக்குடியமர்த்துவது என்று கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்.செயலகம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ-70)

# பண்டத்தரிப்பு நகரப் பகுதியில் நுளம்பு பெருகும் அபாயம்

## கழிவு வாய்க்கால்கள் சேதமடைந்துள்ளமையே காரணம்

வலி.தென்மேற்கு,ஜூன்9

பண்டத்தரிப்பு நகரப் பகுதியில் பிரதான வீதியின் ஓரமாகவுள்ள வெள்ளநீர் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் உடைந்து சேதமடைந்து கழிவு நீர் தேங்கியுள்ளதால் நுளமபுகள் பெருகுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாய்க்கால்களில் அண்மையில் பெய்த மழை காரணமாக வெள்ளநீர் தேங்கியுள்ளதாகப் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவரூபன், சேதமடைந்துள்ள இந்த வாய்க்கால்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலி.தென்.மேற்குப் பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழிவு நீரும், வெள்ள நீரும் வாய்க்கால்களில் தேங்கியுள்ளதால் நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இதனால், தொற்றுநோய்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (8-135)

# வல்லை தபாலகத்துக்கு கட்டடம் இல்லை; பணிகளை முன்னெடுப்பதில் தடங்கல்

கரவெட்டி,ஜூன்9

வல்வை பிரதம அஞ்சலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் அஞ்சல் சேவைகளைச் சீராகச் செயற்படுத்தமுடியாத நிலை உருவாகியுள்ளது என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

அஞ்சலகம் இயங்கிய கட்டடம் அண்மைக்காலமாக இராணுவ நடவடிக்கையின்போது சேதமடைந்தது. அதன்பின் தனியாரின் வீடுகளிலேயே தபாலகம் இயங்கி வருகின்றது.

அந்த வீடுகளில் போதிய வசதிகள் இல்லாததால், அஞ்சல் சேவையைச் சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அஞ்சலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அஞ்சலகத்தில் போதிய வசதிகள் இல்லாததால், தபால்கள் சேதமடைவதாகவும், சில சமயங்களில் கடிதங்கள் கிடைப்பதில்லை என்றும் மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இந்த அஞ்சலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்து சிறந்த சேவையை மக்கள் பெற ஏற்பாடு செய்யவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அஞ்சலகம் தரம் II நிலையில் உள்ள போதும், நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்த அமைப்புக்கள் குற்றஞ்சாட்டின. (எ-70)

# பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலக் கற்கை இடைநிறுத்தம்!

வலி.வடக்கு,ஜூன்9

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடத்தப்பட்டு வந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி இவ்வருடத்துடன் இடைநிறுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் யாழ். மாவட்டம் மற்றும் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்றப்படாத ஆசிரியர்களை பயிற்சிக்கு உள்வாங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கலாசாலையில் நடைபெற்றன.

ஆங்கிலப் பாடநெறிக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் மகரகமவில் இடம்பெறவுள்ளதாக இந்த் நேர்முகப் பரீட்சையில் வைத்து அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன் அவர்களை அங்கு சென்று கற்கைநெறியைத் தொடருமாறு பணிக்கப்பட்டதாகவும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரிய மாணவர்கள் அதிருப்தி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-86)

**நாளை**

வைகாசி 28
வியாழக்கிழமை
(10.06.2004)
திதி : அட்டமி
இரவு 7.11 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
இரவு 9.40 வரை
அட்டமி - நவமி
சுபநேரம்: 7.22 - 08.52
ராகுகாலம்: 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இல்லாதவனுக்கு அள்ளிக் கொடுக்காது விட்டாலும் கிள்ளியாவது கொடு.

# இந்துக்குருமார் ஒன்றியத்தின் மகாசபைக் கூட்டம் சனியன்று

வலி.தெற்கு,ஜூன்9

கடந்த 5ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் அமைந்துள்ள இந்து மதகுருமார் ஒன்றியத்தின் தலைமைச் செயலகத்தில் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள் தலைமையில் கூட்டம் இடம்பெறும்.

ஒன்றியத்தின் செயலகக் கட்டடத் திறப்பு விழாவின் முதலாவது வருட நிறைவை முன்னிட்டு, வயலின் வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ்.சர்வேஸ்வரசர்மா தம்பதியினர், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தம்பதியினர், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதியினர், ஆகியோர் அன்றைய தினம் ஒன்றியத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட குருகுல கலாசாலையில் ஒருவருடம் கல்வி கற்று பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்குரிய சான்றிதழ்களும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன.

ஒன்றியத்துக்கான புதிய நிர்வாக சபையினர் தெரிவும் அன்று நடைபெறும். (எ-152)

# டெங்கு - ஓர் உயிர்கொல்லி

டெங்கு நோயின் தாக்கம், அது பரவும் வழிமுறைகள், அதனைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்தக் கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகிறது.

இலங்கையிலிருந்து டெங்குக் காய்ச்சலை விரட்டியடிக்க வேண்டுமாயின், டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவதற்கு இடவசதிகளை உருவாக்குபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், அந்த நுளம்புகள் பெருகுவதற்கு வழிவகுத்துக் கொடுக்கும் பொதிசெய் உபகரணங்களைப் பாவிப்பதைத் தடை செய்யவேண்டும் என்றும் சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நுளம்பு உற்பத்திப் பெருக்கத்துக்கு வசதி வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்போருக்கு நுளம்புகளால் பரவும் நோய்களைத் தடுக்கும் சட்டவிதிகளின் கீழ் ஆறு மாத சிறைத்தண்டனை வழங்க முடியும் என்றும் அந்த சட்டத்தையும் உள்ளடக்கி கடுமையான சட்ட விதிகள் கொண்ட தேசிய மட்டத்திலான டெங்கு ஒழிப்பு செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதார அதிகாரிகள், நுளம்புகளால் பெருகும் நோய்களைத் தடுக்கும் சட்டவிதிகளின் கீழ் உள்ள நடைமுறைகளை நடைமுறைப்படுத்தாது, வெறுமனே டெங்குக் காய்ச்சலைப்பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதால் நோய்த் தடுப்பை மேற்கொள்ளமுடியாதென சுகாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டிலும் அடிக்கடி தலைதூக்கிவரும் இந்த டெங்குக் காய்ச்சல், தற்போது உயிர்க்கொல்லி நோயாக (EPIDEMIC) அல்லாது சாதாரண நோயொன்றாக (ENDEMIC) மாற்றமடைந்துள்ளது. இந்த நோய் இலங்கையில் முதற்தடவையாக 1989 இல் உயிர்க்கொல்லி நோயாகப் பரவியுள்ளதோடு அன்று முதல் இன்றுவரை ஒவ்வொரு ஆண்டிலும் அந்த நோய்த்தடுப்புச் செயற்றிட்டங்கள் சமூகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆயினும், நோய்த் தாக்கம் குறைந்துள்ளதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. அது மட்டுமன்றி, நாளுக்குநாள் அந்நோயினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கையைப் போன்றே அந்நோயினால் இறப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

நுளம்புப் பெருக்கத்துக்குத் துணைபுரிவோருக்கு எதிராகச் சிறைத்தண்டனை வழங்கும் சட்டவிதிகளின் கீழ் தற்போது உள்ளூராட்சி நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும நுளம்புகளால் பரவும் நோய்களைத் தடுக்கும் சட்டவிதிகளை மத்திய அரசு பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கருத்து இப்போது வலுவடைந்துள்ளது. இந்த டெங்கு நுளம்புகள் பரவுவதற்குக் காரணமான மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய வெற்றுத்தகரப் பேணிகள், இளநீர்க் கோம்பைகள், பாவித்த பின்னர் வீசி எறியப்படும் யோகட், ஐஸ்கிறீம் ஆகியவற்றின் வெற்றுப் பிளாஸ்ரிக் கோப்பைகள், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கிலான பைகள் என்பன அழிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு வந்தாலும், அவை செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கொலி போன்று பயனற்றுப் போயுள்ளன. இன்றும் பல வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு அருகில் அத்தகைய பொருள்கள் குவிக்கப்பட்டுள்ளன.


எமது நாட்டில் உணவு வகைளைப் பொதிசெய்வதற்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் உறைகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் தற்போது உணவு வகைகளை பொதிசெய்ய உக்கிப் போகக் கூடியதும் மீள் உருவாக்கம் மேற்கொள்ளக் கூடியதுமான பொருள்களையே பயன்படுத்துகின்றன.

எமது நாட்டிலும் அந்தமுறை பின்பற்றப்படுமாயின் சூழல் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதோடு, டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களைக் குறைக்கவும் முடியும். அத்துடன், சூழலுக்குப் பாதிப்பற்ற இத்தகைய பொருள் மீள் உருவாக்கம் மேற்கொள்ளக்கூடிய வகைகளாக இருப்பதால் வர்த்தக ரீதியில் இலாபகரமாக அமையவும் வாய்ப்புள்ளது.

இன்று கொழும்பில் கறுவாக்காடு, வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி, பம்பலப்பிட்டி, பாமன்கடை போன்ற நகரப்புறங்களில் வாழும் பணக்கார வர்க்கத்தை சேர்ந்தவர்களே பிளாஸ்ரிக் மற்றும் ரெஜிபோம் உறைகளில் அடைக்கப்பட்டுள்ள உணவுவகைகளை பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், அப்பிரதேசங்களில் பிரதான வீதிகளின் இருபுறங்களிலும் காணப்படும் குப்பைக் குவியல்களில் மேற்படி பொருள்களையே பெருமளவில் காணமுடிகின்றது. அதுபோன்றே ஒவ்வொரு ஆண்டிலும் மழைக்காலங்களில் டெங்குக் காய்ச்சல் நோயாளரின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் இப்பிரதேசங்களிலேயே காணப்படுவதால், கொழும்பு மாநகரசபையின் மக்கள் சுகாதாரம் தொடர்பான பிரிவு இப்பிரதேசங்களிலுள்ள வீடுகள் தோறும் சென்று டெங்கு ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

'பசுமை மிக்க நட்சத்திர வீட்டுத் திட்டம்' என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், நுளம்புகள் பெருகாத வகையில் தமது வீட்டுத் தோட்டங்களை வைத்திருப்போரின் வீடுகளின் முன்புறத்தில் பாராட்டு முத்திரைகள் ஒட்டப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அதேபோன்று, நுளம்புப் பெருக்கத்திற்கு சாத்தியமாக வீட்டுத்தோட்டங்களை வைத்திருப்போருக்கு, அவற்றைச் சுத்தம் செய்ய ஒருவார கால அவகாசம் வழங்கப்படும். அக்கால வரையறைக்குள் முறையாக வீட்டுத்தோட்டத்தைச் சுத்தப்படுத்தாவிட்டால் அந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவதற்கு வீதியோரங்களில் ஆங்காங்கே காணப்படும் ரயர்கள் மற்றும் வீட்டுக் கூரைகளின் மீது போடப்பட்டுள்ள ரயர்கள் மற்றொரு காரணமாகக் கூறமுடியும்.

மழைகாலங்களில் இவற்றினுள் தேங்கி நிற்கும் மழைநீர் மூலம் டெங்கு நுளம்புகள் பெருகுவது கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபைமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'பசுமை மிக்க நட்சத்திர வீட்டுத்திட்டம்' மற்றும் பாதையோரங்களில் போடப்பட்டுள்ள ரயர்களைக் கண்காணிக்கும் நடைமுறை போன்றவற்றை ஏனைய உள்ளூராட்சி அதிகாரிகளும் செயற்படுத்துவார்களாயின், டெங்கு நுளம்புகளின் தொல்லைகளை நாடளாவிய ரீதியில் கட்டுப்படுத்த முடியும்.

வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் ஒரு சில இராணுவ முகாம்களின் கூரைகள் பொலித்தீன் சீலை வகைகளால் மூடப்பட்டுள்ளதால், மழைகாலங்களில், அவற்றின் மேல் தங்கி நிற்கும் நீரின் மூலமும் இந்த டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவது தெரியவந்துள்ளது. அத்துடன், வீடுகளில் அழகுக்காக வளர்க்கப்படும் 'ப்ரோமேலியா' என்ற செடியும் டெங்கு நுளம்பு பெருகுவதற்குத் துணைபுரிகிறது. 'கெக்டஸ்' செடியைப் போன்று காணப்படும் இச்செடியின் இலைகளின் நுனியில் கிண்ணம் போன்ற அமைப்பு இருப்பதால், அவற்றில் தேங்கி நிற்கும் நீரில் நுளம்புக் குடம்பிகள் பெருகுவதும் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து அத்தகைய செடிகளை இல்லங்களில் வளர்க்க வேண்டாமெனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டெங்குக் காய்ச்சல் தொற்றும் முறை மற்றும் அதன் அறிகுறிகள் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தப்படுவது மாத்திரம் போதுமானதல்ல என்பதை




இது உணர்த்தியுள்ளது. முக்கியமாக டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் போன்று அவற்றை அழிக்கும் முறை பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதோடு, அத்தகைய ஏதுக்களை உருவாக்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டங்களின் தேவையையும் இது உணர்த்தியுள்ளது.

உண்மையில், இந்த டெங்கு தொல்லையில் இருந்து நாடு மீள வேண்டுமாயின், மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் தொடர்பாக அதிகாரிகள் மாத்திரமல்ல மக்களும் அக்கறை செலுத்தவேண்டும். சில காலங்களாக, உயிர்க்கொல்லி நோயாக டெங்கு பரவியிருந்த கியூபா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பின்பற்றப்பட்ட தேசிய மட்டத்திலான சட்ட விதிகள் கொண்ட மாபெரும் டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் மூலமே அதைக் கட்டுப்படுத்த முடிந்தது. அந்த நாடுகள், உணவுவகைகள் அடைக்கப் பயன்படுத்தப்பட்ட உக்கிப் போகாத பொலித்தீன் பைகளைத் தடைசெய்தன. அவற்றுக்குப் பதிலாக, மீள் உருவாக்கம் பெறக்கூடிய பைகளை உற்பத்தி செய்ய வழிவகுத்தன. இதன் மூலம் அந்நாடுகளில் டெங்குத் தொல்லையை நீக்க முடிந்துள்ளதோடு, பயன்படுத்திக் கழிக்கப்பட்ட பொதி உறைகளை மீள் உருவாக்கம் செய்யும் நிறுவனங்கள் அதிகம் உருவானதால் பெரும் எண்ணிக்கையானோரின் அன்றாட வருவாய்க்கும் வழிவகுத்துள்ளது.

எமது நாடும் இத்தொல்லையில் இருந்து மீள்வதற்கு, இத்தகைய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தாது, ஒவ்வொரு ஆண்டிலும் மழைக்காலங்களில் மாத்திரம் இந்நோய் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவது டெங்கு நோயைக் கட்டுப்படுத்தப்போதுமானதல்ல.


மத்திய அரசினால் உருவாக்கப்பட்டுள்ள டெங்கு தொடர்பான செயற்பாட்டு அதிகார சபையைப் போன்றே, உள்ளூராட்சி நிறுவனங்களால்

சரா

நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மேற்படி செயற்பாடுகள் கொண்ட அதிகார சபைகளும் உயிரூட்டப்பட வேண்டியுள்ளதோடு, தேசிய மட்டத்திலான நடைமுறைத் திட்டத்தில் அப்பிரிவுகளும் இணைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோருக்கு இறப்பை ஏற்படுத்தும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, சகல தரத்தில் உள்ளோரும் ஒட்டு மொத்தமாகச் செயற்படவேண்டியது அவசியமாகும். ★

# அகத்திக்கீரை பல நோய்களுக்கான நிவாரணி



அகத்திக்கீரையை வாரம் ஒரு முறை உணவில் சேர்த்துக் கொண்டால் போதுமானதாகும். மலச்சிக்கலினால் உண்டாகும் தலைவலி, திடீரென ஏற்படும் தலைவலி போன்றவற்றுக்கு இம்மூலிகையினை நன்கு அரைத்து நெற்றியில் பற்றுப் போடலாம். வெண்குட்டம் மறையவும், ஏற்படாமலிருக்கவும் அகத்திக் கீரையினை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். குடலில் இருக்கும் உருண்டைப் புழு, நாடாப்புழு, சிறுகீரிப்பூச்சிகள் போன்றவை குடலை விட்டு ஒழிய அகத்திக் கீரையை வாரம் ஒரு முறை உணவுடன் பயன்படுத்தினால் போதும். இக்கீரையுடன் வெங்காயம், சீரகம், மிளகு, உப்பு சேர்த்து கொதிக்க வைத்து சூப்பாகப் பருகலாம். இம்மூலிகையை உண்பதினால் குடலில் இருக்கும் புண் நீங்கி, வாய்நாற்றமும் போகும்.

இக்கீரையில் விற்றமின் 'A' அதிகமாகக் காணப்படுகின்றது. இரும்புசத்து, சுண்ணாம்புச் சத்து, உயிர் சத்து, தாதுப்பொருள்கள் அதிகம் இருப்பதால் எலும்புகளும் பற்களும் உறுதி பெறுகின்றன. பித்தத்தினை கண்டிக்கும் மாந்தத்தினை போக்கவல்லது. நரம்புத் தளர்ச்சியினைப் போக்க வல்லது. அகத்திக் கீரையினை வெய்யிலில் காயவைத்து எடுத்து பொடித்து சூரணமாக்கி வைத்து கொண்டு தினசரி காலை, மாலை இரு வேளைகளிலும் இரண்டு கிராம் தூளை எடுத்து வெந்நீரிலாவது, பாலிலாவது கலந்து குடிக்கலாம். இதனால், வாந்திபேதி, வயிற்றுவலி, மார்புவலி முதலியவை குணமாகும்.

அகத்திப் பூவையும், மொட்டுக்களையும் உணவாகப் பயன்படுத்தலாம். கண் எரிச்சல், கண்வலி, நீர்வடிதல் முதலியவற்றினைப் போக்கும். இதன மட்டைவேர் போன்றவற்றினையும் நீருடன் காய்ச்சிக் குடிப்பதனால் உடலின் உள் உஷ்ணத்தினைப் போக்கி உடலைச் சமன்செய்கிறது.

## மூலிகை மருத்துவம்

அகத்திக் கீரையினை உண்பதால் குடலில் உண்டாகும் விஷநீர்களை முறித்து வெளியேற்றுகிறது. நல்ல செரிமானத்தினை உண்டு செய்கின்றது. இக்கீரையினைப் பச்சையாக மென்று விழுங்குவதால் தொண்டை நோய்கள், பல்நோய்கள் குணமாகும். இளந்தாய்மார்கள் இக்கீரையினை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் அதிகப்பால் சுரக்கும். மூளை சுத்திகரிக்கும். குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும்.

**வாய்ப்புண் நீங்க:**

வாயில் புண் தோன்றினால், வயிற்றிலும் புண் உண்டாகி இருக்கும். இதை குணப்படுத்த அகத்திக் கீரை நன்கு பயன்படக் கூடியதாக இருக்கின்றது. தேவையான அளவு அகத்திக் கீரையினை எடுத்து, அந்த அளவில் நான்கில் ஒரு பங்கு வெங்காயத்தினை நறுக்கி அதையும் ஒரு சட்டியில் போட்டு இரண்டு ரம்ளர் அளவு நீரை வடிகட்டி சிறிதளவு உப்பு சேர்த்து வெறும் வயிற்றினில் குடித்து வரவும். அந்த கீரையினை பொரியல் செய்து தேங்காய் சேர்த்து பகல் உணவுடன சேர்த்துச் சாப்பிட்டு வரவேண்டும். இந்த விதமாக ஒரு வாரம் சாப்பிட்டு வர வயிற்றுப்புண் ஆறும். வாய்ப்புண் நலமடையும்.

**கண்எரிச்சல் குணமாக:**

அகத்திக் கீரையை எடுத்து அதை உரலில் போட்டு இடித்து சாறு எடுத்து அரை ரம்ளர் சாற்றினை ஒரு சட்டியில் விட்டு அத்துடன் அரை ரம்ளர் துவரம் பருப்பு சேர்த்து

தொகுப்பு: தேவா

வேகவைத்து அதே அளவு தேங்காய்ப் பால் சேர்த்துக் கலக்கி தினசரி சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் குணமாகும்.

இருதய வைத்திய நிபுணர் டாக்டர் சதீஸ்குமார் குப்தாவின் "எதையும் தாங்குமா இதயம்" கட்டுரைத் தொடரின் நான்காம் பகுதி அடுத்த வாரம் சுகநலத்தில் வெளிவரும்.

# இந்தியாவின் புதிய அணுகுமுறை நல்ல சமிக்ஞை என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம்,ஜூன்9

இந்தியாவில் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசின் அணுகுமுறைகளும் அறிவிப்புக்களும் நல்ல சமிக்ஞைகளாக உள்ளன என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப்.(சுரேஷ்அணி) செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

புதிய அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் இடம்பெறுவதால், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்தக் கோரமாட்டோம் என்று நட்வர்சிங் கூறியுள்ளார். இது சமாதானப் பேச்சுகளுக்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள விரும்புகிறோம் என இந்திய தூதர் நிருபன்சென கருத்து வெளியிட்டுள்ளார். வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க எடுத்துள்ள முடிவு வரவேற்கத் தக்க விடயமாகும்.



இந்த வகையில் இந்தியா எடுத்துள்ள அணுகு முறைகள், சமாதான முயற்சிகளுக்கு உந்து சக்தியாகவும் உத்வேகம் அளிப்பதாகவும் அமைந்துள்ளன. இந்தியா நல்ல சமிக்ஞைகளை வெளியிடுவதைச் அவதானிக்க முடிகின்றது - என்றார் அவர். (எ-3)

## தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அ.அட்டைகள்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் மேலும் ஒரு தொகுதியினருக்குரிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர் ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# கொடிகாமத்தில் விவசாய நிலத்தினை மீட்டுத்தரக் கோரி மகஜர் சமர்ப்பிப்பு

கொடிகாமம் கோயிலாமனைப் பகுதியில் படையினரின் பாதுகாப்பு அரணுக்குள் உள்ள விவசாய நிலத்தினை மீட்டுத்தருமாறு இப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இப்பகுதியில் உள்ள பெருமளவு விவசாய நிலங்கள் இராணுவ அரணுக்குள் உள்ளதால், இங்குள்ள பலர் தமது ஜீவனோபாய வருமானத்தை இழந்துள்ளனர்.

இப்பகுதியில் படையினரின் முகாம் உள்ளதால் இரவு 9.00 மணிக்குப்பின்னர் நடமாடமுடியாத நிலையும் உளளது. அத்துடன் அவசர தேவைக்கு வீதியைப் பயன்படுத்த படையினரின் அனுமதி பெறவேண்டியுள்ளது.

தற்போது நிலவும் சமாதான சூழலில் ஏனைய பகுதி மக்களைப்போல நாம் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதைக்கு படையினரை அங்கிருந்து வெளியேற்றி எமது விளைநிலங்களை மீட்டுத் தாருங்கள் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## சமூக சேவை அலுவலராக பதவியுயர்வு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கணக்குப் பதிவாளராகக் கடமையாற்றிய ப.சுதன் சமூகசேவை உத்தியோகத்தராக பதவியுயர்வு வழங்கப்பட்டு திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்தவருடம் நடைபெற்றபோட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றதையடுத்து இவருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# நாகர்கோவில் வீதித் தடையினை நீக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

## நலன்பேணும் அமைப்பு அனுப்பிவைத்தது

தென்மராட்சி,ஜூன்9

வடமராட்சியிலிருந்து வடமராட்சி கிழக்குக்குச் செல்லும் பிரதான வீதியில உள்ள நாகர்கோவில் வீதித் தடையினை நீக்கி இப்பிரதேச மக்களின் போக்குவரத்தினை இலகுவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாகர்கோவில் இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளது.

இந்த வீதி திறக்கப்பட்டால் இரண்டு பிரதேச மக்களின் போக்குவரத்து இலகுவாக மாறுவதுடன் இப்பிரதேசங்களின் அபிவிருத்தியும் உயர்நிலை அடையும் என்றும் -

குறித்த வீதியைப் போக்குவரத்துக்குத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் ஆட்சேபனைகள் தெரிவிக்காதபோதிலும் படையினரே இந்த வீதியைத் திறக்க முட்டுக்கட்டையாக உள்ளனர் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வீதி திறக்கப்படாததால் பிரதேச மக்கள் நீண்ட தூரப் பயணத்தை முகமாலையூடாக மேற்கொண்டு வருவது தெரிந்ததே. (எ-117)

# மனோகராச் சந்தி தாக்குதல் சம்பவம்: சந்தேக நபருக்கு நீதிமன்று பிணை

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ் மனோகராச் சந்தியில் கடந்த மாதம் மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து கைதான அந்த மோட்டார் சைக்கிள் ஓட்டியை பிணையில் செல்ல யாழ். மேலதிக நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

யாழ்.ஐந்துசந்தியைச் சேர்ந்த ரதன் என அழைக்கப்படும் விஷ்ணுகாந்தன், யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரைப்பிணையில் விடுமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனுத்தாக்கல் செய்தார்.

இவரை வெளியில் விட்டால் அவருக்கு ஆபத்து உள்ளது. ஆனபடியால் பிணையில் விடவேண்டாம் என்று பொலீஸ் தரப்பினர் நீதிவானிடம் தெரிவித்தனர்.

பிரஸ்தாப சந்தேகநபர் எதிர்காலத்தில் எந்தவிதமான சட்டவிரோதச் சம்பவங்களுடனும் சம்பந்தப்படமாட்டார் என உறுதி கூறியதை அடுத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான இருவரின் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

பிரஸ்தாப நபர் மோட்டார் சைக்கிளில் வந்த சமயம், மனோகராச் சந்தியில் இனந்தெரியாதவர்களால் மறிக்கப்பட்டு அவர் தாக்கப்பட்டதும் அவரது மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டதும் தெரிந்ததே. (-3)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஏ.ஆர்.வி. மருந்து இல்லை

தென்மராட்சி,ஜூன்9

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் விசர்நாய்க்கடிக்கான ஏற்புத் தடை ஊசி மருந்து (ஏ.ஆர்.வி.) முடிவடைந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. விசர்நாய்க்கடிக்கு இலக்காவோர் இதனால பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து இல்லாததால் தடுப்பூசி மருந்தினை ஏற்றுவதற்கு யாழ்ப்பாணம் அல்லது மந்திகைக்கு செல்லுமாறு வைத்தியர்கள் கூறுகின்றனராம்.

விசர்நாய்களினால் கடியுண்டோர் தொகை சாவகச்சேரியில் அதிகரித்துள்ளது. எனினும், ஆஸ்பத்திரியில் இதற்குரிய தடுப்பூசி மருந்து இல்லாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஐந்து மாதங்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் விசர்நாய்களினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தடுப்பூசி ஏற்றிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-117)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 - 06 - 1920



உதிர்வு 11 - 05 - 2004

எங்கள் அன்புத் தெய்வம்

### வீரகத்தி சின்னையா

(நாகர்கோயில்)

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானவரே ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (10-06-2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன. அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தியுதோடு தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம். இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை, பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.

(32821)(42-21-14-19)



## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்ந்தது 24 - 11 - 1970



மறைந்தது 09 - 06 - 1992

### லெப்டினன்ட் வேந்தன்/கில்மன்

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)

### வேலாயுதபிள்ளை வரதன்

(பளை மகாவித்தியாலய உயர்தர வகுப்பு பழைய மாணவன்)

மண்மீட்புப் போரிலே
மரணித்த மறவனே!
தாய் மண்ணை மீட்க
தமிழ்மானம் காக்க
தமிழீழத் தாயின் மடியிலே - வித்தாகினாய்
வித்தான உன் மேலே
விருட்சங்கள் பல
வெற்றிகளும் பல......

என்றும் உன் நினைவுகளுடன்:
அப்பா, அம்மா,
அக்கா, அத்தான்,
மருமக்கள், உறவினர்கள்.

திருவதிகை,
அளவெட்டி,
யாழ்ப்பாணம். (32850) (26-21-14-19)



## தேவை

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு Accounts Clerk (கணக்கு எழுதுநர்), Cashier (காசாளர்), இரவுக் காவலாளி (Night watcher) தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

சென்றல் கிளினிக்

வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

காலை-8மணிக்கு முன்பு / மாலை-4மணிக்கு பின்பு } நேரில் வரவும்.

T.P-2225977 (32829)



## படிவம்

2005 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி -30.06.2004

BHARATHY PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD,
JAFFNA (C/35474)



மீண்டும் யாழ் நகரில்..........

## பிள்ளையார் லேணேர்ஸ்

சாரதிப் பயிற்சியளிப்பதில் யாழ் நகரின் முன்னோடிகள்

எமது மீள்வரவை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு

இலவசப்பயிற்சியுடன் லைசென்ஸ்

239, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

சட்ட அங்கீகார எண்: D.S. 379





உ
கண்ணகை அம்பாள் துணை

## வரணி, சிட்டிவேரம்
## ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய
### வருடாந்த மஹோற்சவ
### *10ஆம் திருவிழா விசேட நிகழ்ச்சிகள்*

**இன்று (09-06-2004) புதன்கிழமை**
இரவு ஆலயத்தில் விசேட நிகழ்வாக
அகில இலங்கை ஜனாதிபதி விருதுபெற்ற

**K.S. பாஸ்கரன் குழுவினர்**

30பேர் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் இணைந்து வழங்கும் கரகாட்டம், காவடிஆட்டம், பக்திப் பாடல் நடனங்கள், தமிழீழ எழுச்சிப்பாடல்களுக்கான புதிய நிர்மாணிப்பு நடனங்கள், திரை இசைப்பாடல்களுக்கான துள்ளிசை நடனங்கள் என்பன இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இசைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.


நிகழ்ச்சித் தொகுப்பாளர்: கலைக்குரல **S.P. நாதன்**

*அம்பாள் அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!*

**10ஆம் திருவிழா**
**உபயகாரர்கள்.**

(32865) (26-13-12-21)

## முதலாம் வருட அஞ்சலி

| தாய்மடி | | இறைமடி |
|---|---|---|
| 03 - 06 - 1946 |  | 22 - 05 - 2003 |

அமரர்
### சின்னத்தம்பி கண்ணுத்துரை
(கந்தசாமி)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை
எம்மிதயம்! என்றும்
உம்மை நினைந்தே கண் கலங்குகிறோம்!
யுகமேழு கடந்தாலும் உம்மை
என்றென்றும் மறவோம்.

சுழிபுரம் தெற்கு,
சுழிபுரம்.
என்றும் உங்கள் நினைவுடன்:
**க.கண்ணன்**
(துஷாந்தன்)
(32869)(42-21-13-12)

## காணி தேவை

நல்லூர் சுற்றாடலில்
வீடு கட்டக்கூடிய
2 பரப்புக் காணி
தேவை.

தொடர்பு:
☎ 0112 559704.
கொழும்பு.
(32867)

## விற்பனைக்கு

புறொஜெக்ரர்
SHARP-(JAPAN)
விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:*
**விநாயகர் வீடியோ சென்ரர்,**
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
(32355)

## தேவை

அப்பள வேலை செய்வதற்கு ஆண்/பெண் இருபாலாரும் உடன தேவை. சம்பளம். 1Kg-20/=.

தொடர்பு
**R.S.M.**
அப்பளக் கொம்பனி
கே.கே.எஸ்.வீதி,
*(சிறுவர் பூங்கா முன்பாக)*
மல்லாகம்.
(32858)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது, கார்த்திகை 3ஆம பாதம், உதயத்தில் செவ்வாய், 54 பாவம் உடைய பிரான்ஸ் நாட்டில் வசிகும் மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை. ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் மணமகள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
விளம்பர இல.2291
மே/பா - உதயன்,
யாழ்ப்பாணம்.
(32860)

## மருந்து விற்பனையாளர் தேவை

மருந்து விற்பனையில் முன் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் (ஆண்/பெண் இருபாலாரும்) சுயவிவரங்களுடன் நேரில் சமுகந்தரவும்.

தொடர்பு:
**தங்கவேல் பார்மஸி,**
406,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(32868)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சங்கானை, வல்லை வீதி, முதலாம் ஒழுங்கை,
குமுதத்தைச் சேர்ந்தவர்களான
திரு.திருமதி குமணன் - இலங்கேஸ்வரி (ராகினி)
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### ப்ருஷோத்

அவர்களின் முதலாவது பிறந்தநாளாகிய இன்று (09.06.2004) புதன்கிழமை
அவரைப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம்
நலமுடன் வாழ்க என்று மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நவலட்சனா (சித்தி),
சுலெக்ஷன், விஷ்ணுகாந், சிவகரன், நிக்சாந், நக்சாந் (அண்ணன்மார்கள்),
அபிலக்ஷனா, விஷ்ணுகா, தக்ஷிகா (அக்காமார்கள்),
துவாரகன் (அத்தான்), தரங்கினி (மச்சாள்),
பூட்டி, உற்றார், உறவினர்கள்.

'குமுதம்'
9/9, முதலாம் ஒழுங்கை,
வல்லை வீதி, சங்கானை.
(32782) (34-19-24)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**09-06-2004**
செல்வன்
### ஜெ.ஷாகித்தியன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட
**திரு.திருமதி ஜெகதீசன்**
தம்பதியினரின் செல்வப்புதல்வன்
செல்வன் **ஷாகித்தியன்**
அவர்கள் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (09.06.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
செல்வன் ஷாகித்தியன் இறைவனின் அருளாசி பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**- அன்பு அம்மா, அப்பா,**
**ஆசை அக்கா, பாட்டி, சாந்தி மற்றும்**
**உறவினர்கள்.**

"ரட்ணஸ் கந்தம்",
அம்பனை, சுன்னாகம்.
(21-42-13-12) (32856)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அறிவித்தல்


### 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினப் போட்டி ~ திகதி மாற்றம்

**மேற்படி தினத்தையொட்டி தரம் 10,11 மற்றும் 12, 13 இற்கான கட்டுரை, சித்திரப் போட்டிகள் 11.06.2004இல் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தினால் இப்போட்டிகள் 13.06.2004இல் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். வினாடிவினா, பேச்சுப்போட்டிகள் முன்னர் அறிவித்தவாறே 12.06.2004 இல் நடைபெறும.**

- செயலாளர்.

(சி-35493) (26-12-13-21)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1940-04-08 |  | 2002-06-02 |

### அமரர் கனகசபை நாகரட்ணம்
(Retired Research Assistant )

திதி: 2004-06-09 - அபரபக்க ஸ்ப்தமி

*268 (68), Brown Road,*
*Jaffna.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்**

(32866)(38-21-12-13)

# கேள்வி அறிவித்தல்
## அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்.

1. மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் அவர்களினால் ஊர்காவற்றுறை அரசாங்க அலுவலர்களுக்கான விடுதி நிர்மாணித்தல் கட்டம் (II) வேலைக்குரிய கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபைத் தலைவரினால் 2004ஆம் ஆண்டு ஆடி மாதம் 01ஆம் திகதி முற்பகல் 10.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரசாங்க அதிபர் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்.7இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோர் ஆவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப்பணத்தை *யாழ்ப்பாணம் பிரதமபொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2004ஆம் ஆண்டு ஆனி மாதம் 25ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

| வேலைவிவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| ஊர்காவற்றுறை அரசாங்க அலுவலர்களுக்கான விடுதி நிர்மாணித்தல் கட்டம் (II) | 30,000/= | 750/= |

**கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

*மாவட்டச் செயலாளர்,*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*
*09.06.2004*
(C/35492)(42-21-12-13)

**செ.பத்மநாதன்,**
அரச அதிபர்,
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | | கர்த்தரின் பாதத்தில் |
|---|---|---|
| 22 - 10 - 1940 |  | 09 - 06 - 2003 |

### செல்வி மருதர் கண்ணகை (றீற்ரா)
(ஓய்வுபெற்ற தாதி - யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)

**கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்**
**அவர் பார்வைக்கு அருமையானது** சங்கீதம் 116:15

எங்கள் பாசம் மிகுந்த சகோதரியின் பிரிவால் வாடும் செல்லாச்சி விசாலாட்சி, தங்கமேனி, இராமையா, அமிர்தமணி, பூமணி, யோகம் மற்றும் மைத்துனர்மார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இன்றைய தினம் எமது அன்புத் தெய்வத்தை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*268,பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*
(32854)(38-21-12-13)

தகவல்:
**வை.கணபதிப்பிள்ளை.**
(மைத்துனர்)

# தேர்தல் கடமைக் கொடுப்பனவு அதிகரித்து வழங்கப்படவேண்டும்

## எழுதுநர் சங்கம் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம்

தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா அரச எழுதுநர் சேவைகள் சங்கம தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளது. இது விடயமாக மேற்படி சங்கம் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது வாக்களிப்பு நிலையமொன்றின் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டு வரும் ஆயிரத்து 200 ரூபாவை ஆயிரத்து 500 ரூபாவாகவும், உதவிப் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டு வரும் 600 ரூபாவை ஆயிரத்து 200 ரூபாவாகவும் எழுதுவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 500 ரூபாவை 900 ரூபாவாகவும் உதவியாளருக்கான கொடுப்பனவை 600 ரூபாவாகவும் உயர்த்துதல் வேண்டும். நடைபெறவுள்ள மாகாண சபைத்தேர்தலில் இருந்து இந்தக் கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்க ஆவனசெய்யவும் இதுவிடயமாகத் தங்களைச் சந்தித்துப் பேச்சு நடத்த நாளொன்றை ஒதுக்கித் தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகி வருவதைக் கருத்திற்கொண்டு இந்தக் கொடுப்பனவு அதிகரிப்புத் தொடர்பான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்றும்- கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

### வீதியைப் புனரமைக்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு,ஜூன்9

பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து தொட்டிலடி ஊடாக சண்டிலிப்பாய்ச் சந்திவரை செல்லும் பிரதான வீதியில் சேதமடைந்த இடங்களைப் புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டு வந்துள்ளது.

கடந்த வாரம் இதனைத் திருத்துவதற்கான கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் திருத்த வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

### கல்வயலுக்கு இன்று மின்சாரம் கிடைக்கும்

தென்மராட்சி,ஜூன்9

சாவகச்சேரி வடக்கு, கல்வயல் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகியவற்றுக்கான மின் விநியோகம் இன்று ஆரம்பித்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிக்கான மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்ததை அடுத்து சாவகச்சேரி வடக்கு, டச்சு வீதிச் சந்தியிலும், கல்வயலில் தாளையம்பதி வீதிச் சந்தியிலும் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### நூல் வெளியீடு

கவிஞர் சோ.பத்மநாதன் எழுதிய 'தென்னிலங்கைக் கவிதைகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக மூதறிஞரும், இலக்கிய கலாநிதியுமான மதுரைப் பண்டிதர் கே.சச்சிதானந்தம் கலந்து கொள்வார்.

நூலின் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்துவார்.

சிறப்புரையினை அதிபர் கே.சண்முகராஜாவும், நூலின் ஆய்வுரைகளை இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் க.கந்தையா, பிரபல எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் ஆகியோரும நிகழ்த்துவார்கள். (8-173-78)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

'அஸ்ரா' வெற்றிக்கிண்ணத்துக்காக பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ யூனியன் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி (யூனியன் கல்லூரி மைதானம்),

★ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானம்),

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி (ஹாட்லிக் கல்லூரி மைதானம்)

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்)

★ யாழ்இந்துக் கல்லூரி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி (யாழ். இந்துக் கல்லூரி மைதானம்)

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக கல்லூரி எதிர் பரியோவான் கல்லூரி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்). (10-5-190)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நேர்முகப்பரீட்சை இவ்வாரத்தில்!

### பிரதேச செயலகங்களில் நடக்கும்

பட்டதாரிகளை அரச திணைக்களங்கள் மற்றும் சபைகளில் பயிலுநர்களாக நியமிக்கும் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் பிரதேச செயலக ரீதியாக இந்த வாரம் முதல் இடம்பெறவுள்ளன.

பயிலுநர்களாகப் பணிபுரிய விரும்புபவர்கள் தொடர்பான விவரங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு திறைசேரி, பிரதேச செயலர்களைக் கேட்டிருந்தது.

இதன்படி பிரதேச செயலகங்களுக்கு கிடைத்த விண்ணப்பங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இப்பட்டியல்களின்படி குடாநாட்டில் 2 ஆயிரத்து 977 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இந்த வாரம் முதல் இடம்பெறவிருக்கின்றன.

நேர்முகப் பரீட்சையின் பின்னர் விண்ணப்பங்களும், சான்றிதழ்களும் திறைசேரிக்குப் பிரதேச செயலர்களால் நேரடியாக அனுப்பிவைக்கப் படவிருக்கின்றன.

அந்த விண்ணப்பங்களை திறைசேரி ஆராய்ந்து தகுதியானவர்களை பயிலுநர்களாக நியமிக்கும். (3)

## மண்கும்பான் பஸ்பயணிகள் தரிப்பிடம் இன்றிச் சிரமம்!



படம்: தீபன்

யாழ்ப்பாணம்,ஜூன்9

மண்கும்பான் பகுதி மக்கள் பஸ் தரிப்பிடம் இன்றிச் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் தீவுப் பகுதியின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் இந்தப் பகுதி மக்கள் யாழ். - ஊர்காவற்றுறை வீதியில் வீதி ஓரமாக நிற்கும் மரங்களின் கீழ் காத்திருந்தே பயணம் செய்து வருகின்றனர் என்றும் -

இவ்வாறு பயணத்திற்கென வரும் பயணிகள் கடும் வெயிலிலும் மழையிலும், பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் - முறைப்பாடு தெரிவித்தனர். (எ-ரி)

## கலப்பு வலைப்பந்தாட்டப் போட்டிகள் பல்கலைக்கழக மைதானத்தில் இருதினங்கள்

யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தில பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கலப்பு வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை வியாழக்கிழமையும் மறுதினம் வெள்ளிக்கிழமையும் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறவுள்ளது.

லீக் முறையில் நடத்தப்படும் இச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்திலுள்ள முன்னணிக் கழகங்களான பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு அணி, ஜொலிஸ்ரார் வி.க., பமிலியன்ஸ் வி.க., யுத்கார்மல் வி.க., அரியாலை ஐக்கிய வி.க., யாழ். பல்கலைக்கழகம் மற்றும் பட்டர்பிளை வி.க. ஆகியன பங்குபற்றுகின்றன.

நாளை நடைபெறும் ஆட்டங்களில பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி - யாழ் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு அணி எதிர் ஜொலிஸ்ரார் வி.க.

★ மாலை 4 மணி - பமிலியன்ஸ் வி.க. எதிர் யுத்கார்மல் வி.க.

★ மாலை 5 மணி - அரியாலை ஐக்கிய வி.க. எதிர் யாழ்.பல்கலைக் கழகம்.

இந்தக் கலப்பு வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியானது யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(10-5)

### உடற்பயிற்சிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று புதன்கிழமை 8.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வலயமட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் பங்குபற்றவுள்ளன.

இதேவேளை, மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது. (5-ரி)

## திருகோணமலை சுகாதார சேவைக்கு பிரசவகால மருத்துவக் கருவிகளும் மோட்டார் சைக்கிள்களும் அன்பளிப்பு

### யுனிசெப் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூன்9

ஐ.நா.சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) திருகோணமலையில் உள்ள 15 மருத்துவமனைகளுக்கு பிரசவகால மருத்துவ கருவிகளையும், பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு 15 மோட்டார் சைக்கிள்களையும் வழங்கியுள்ளது. இவைகளின பெறுமதி 10 லட்சத்து 80 ஆயிரம் ரூபா என்று தெரியவருகிறது. மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப்பணிப்பாளர் காரியாலயத்தில் இப்பொருள்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

யுனிசெப்பின் திருகோணமலை வலய காரியாலயத் தலைவர் காப்றியெலா எல்ரோய் அம்மையாரால் கருவிகளும், உபகரணங்களும், மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் காப்றியெலா எல்ரோய் அம்மையார் பேசுகையில், போசாக்கின்மை, குழந்தைகள் மரணம், பிரசவத் தாய்மார் மரணம், 5 வயதுக்குட்பட்டவர்களின் மரணம் ஆகியவற்றின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கையாகும் இது என்றார்.

அரசாங்கத்தின் திருகோணமலைக்கான சுகாதார சேவைக்கான ஆதார உதவியாகவே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளனவென்று குறிப்பிட்ட அவர், திருகோணமலை சுகாதார சேவைகள் பகுதியினருடனான பங்களிப்புத் திட்டமானது ஏற்கனவே செயற்படத் தொடங்கி விட்டது என்றும் 2 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டம் ஒன்றை தாங்கள் செயற்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் டாக்டர் ஈ.ஜி. ஞானகுணாளன் பொருள்களைப் பெற்றுக்கொண்டார். கப்றியேல் அம்மையார் திருகோணமலை சுகாதாரப் பகுதிக்குச் செய்துவரும் உதவிகளை அவர் பாராட்டினார். கடந்த காலங்களில் சிறுவர்களினதும் பெண்களினதும் சுகாதார மேம்பாட்டுக்காக அவர் செய்துள்ள சேவைகளையும் அவர் நினைவுகூர்ந்தார். (ப)




தென்மராட்சி,ஜூன்9

அனுமதிப் பத்திரமின்றி விற்பனைக்கு வைத்திருந்த 20 போத்தல் சாராயத்தினை நிலத்தில் ஊற்றி அழிக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டதுடன், சாராயம் வைத்திருந்த நபருககு 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி சாவகச்சேரிப் பொலீஸாரால் கடந்த திங்கடகிழமை நீதிமன்றில் ஆஜர் செயத கைதடி மேற்கைச் சேர்ந்த ஐ.சத்தியதாஸ ஸ்ரீதரன் என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை - ஒன்றரைப் போத்தல் சாராயம் வைத்திருந்த இதே இடத்தைச் சேர்ந்த வேலன் ஆனந்தராசா என்பவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (எ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்9

அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கு யாழ். நீதிமன்றம் தலா 5.ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் 2.ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் உத்தரவிட்டது.

ஏ.வி.வீதி, அரியாலையைச் சேர்ந்த மயில்வாகனம் சந்திரகுமார், கச்சேரி வீதி, நல்லூரைச் சேர்ந்த தியடோர் கிறகெரி நவரத்தினம், சாஸ்திரியார் வீதி, அரியாலையைச் சேர்ந்த செல்லத்துரை கணேசலிங்கம் ஆகியோருக்கே தண்டம் விதிக்கப்பட்டது.

தர்மப்பணத்தை இருபாலை கானான் சிறுவர் இல்லத்துக்குச் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (8-ரி)

★ ★ ★

யாழ்.பிரதேச செயலகத்தில் காசோலை மோசடி செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு யாழ. நீதிமன்றம் மூன்று வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிததுடன் களவாடிய தொகையைச் செயலகத்தில் செலுத்துமாறும் உத்தரவிடடுள்ளது.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி அன்ரன் என்பவருக்கே மேற்படி தண்டனையை யாழ்.நதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விதித்துள்ளார். (8-ரி)

★ ★ ★

அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்ட ஐவருக்கு யாழ்.நீதிமன்றம் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டது.

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மார்க்கண்டு சுதேஸ்குமார், நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருதப்பு ராஜசிங்கம், யாழ்.வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வடிவேல் சாமிநாதன், ஸ்ரேசன் வதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வெள்ளையன் ஆறுமுகம, கடற்கரை வீதி, குருநகரைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோருக்கே யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இந்த அபராதத்தை விதித்தார். (8-ரி)

★ ★ ★

சட்டவிரோதமாக ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றஞ்சாட்டின்பேரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 13 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சேச்சடி லேன், கூழவாடி, ஆனைக்கோடடையைச் சேர்ந்த தம்பு சின்னதுரை என்பவருக்கே 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் 3 ஆயிரம் ரூபா தர்மப் பணம் செலுத்துமாறும் யாழ்.நதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை -

கசிப்பு உற்பத்தி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கும் யாழ்.நீதிமன்றம் 48 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த யோகரத்தினம் செல்வராகவி என்பவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் 3.ஆயிரம் ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் -

இராஜசிங்கம் வீதி, திருநகரைச் சேர்ந்த பிள்ளையான் கிருஸ்ணராஜா என்பவருக்கு 25.ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் - யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (8-ரி)

★ ★ ★

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 12 பேருக்கு யாழ்.நீதிமன்றம் 60 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது. சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவர்களான பாலசிங்கம் பகீரதன், பொன்னன் கந்தையா, நடேஸ் புலேந்திரன், ரமேஸ் நிருபா, தர்மசிறி எக்ஸலின், சின்னராசா மனோன்மணி மற்றும் கொக்குவில் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த ரெங்கநாதன் இராசலெட்சுமி, செல்லத்துரை பரமேஸ்வரி ஆகியோரையும் கோப்பாய் தெற்கு, கோப்பாயைச் சேர்ந்தவர்களான பழனித்துரை திருச்செல்வி, விக்னேஸ்வரன் வசந்தகுமாரி, நாகமணி தவராசா, கதிர்காமர் மகேந்திரன் ஆகியோரையும் தலா 5 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். (8-6)

HATTON NATIONAL BANK LIMITED HNB

## ஏல விற்பனை அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் 31.05.2003 ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத அடகு நகைகள் 26.06.2004 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ். கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(C-35502)(12-14) - முகாமையாளர்.


## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜுன்9

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் பட்டதாரிப் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பித் தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக் கிழமையும் எதிர்வரும் 11ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளிலும் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள ளது.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அக்கடிதங்கள் கிடைக்கப்பெறாதோர் பிரதேச செயலக திட்டமிடல் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (10)


## காருக்குப் பெயின்ற் அடிப்பவர் தேவை

டொயோட்டா கொரலா கார் ஒன்றிற்கு முழுமையாகப் பெயின்ற் அடிப்பவர் தேவை.
பொருள்கள் வாங்கிக் கொடுக்கப்படும்.
பெயின்ற் அடிப்பதற்கான கூலி விவரத்துடன் எதிர்வரும் 12.06.2004 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: விளம்பர இல. 2294,
மே/பா- உதயன், யாழ்ப்பாணம்.

(சி-35500) (26-12-14)



கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ நாராயணா சனசமூகத்தினதும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், பாலர் பாடசாலையினதும், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்தினதும

## நூலகத் திறப்பு விழா

இடம்: நாராயணா சனசமூக நிலைய பொன்விழா மண்டபம்.
காலம்: இன்று (09.06.2004) புதன்கிழமை மாலை 5.00மணி.
தலைவர்: திரு.சி.கர்ணன் B.A.
(சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய் ச.ச.நி.தலைவர்)
பிரதம விருந்தினர்:
பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)
(வாழ்நாள் பேராசிரியர், யாழ்.மருத்துவபீடம்,
சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி தேசிய ஆலோசகர்)
சிறப்பு விருந்தினர்கள்:
Dr.திரு.இ.கணேசமூர்த்தி
(வைத்திய நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை),
Dr.திருமதி G.பவானி.
(மகப்பேற்று வைத்திய நிபுணர் யாழ். வைத்தியசாலை).
திரு.க.தேவராஜா
(வணிகத்துறைத் தலைவர், பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்),
திரு.சி.இளம்பரிதி
(அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)
கௌரவ விருந்தினர்கள்:
திரு.இ.மதிமாறன்
(வருமானவரி மேற்பார்வையாளர், பிரதேச சபை, நல்லூர்)
திரு.க.ராஜா
(உதவிப் போதகர், அசெம்பிளிஒவ் கோட், யாழ்ப்பாணம்)
திரு.ஐ.இராசரத்தினம்
(தலைவர், ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம், கோண்டாவில் கிழக்கு)
திரு.செ.சண்முகலிங்கம்
(லிகிதர், மோட்டார் வாகனத் திணைக்களம், யாழ்ப்பாணம், நிலையக் கணக்காய்வாளர்)

கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு: - நிலைய நிர்வாகிகள்.

இராசமணி களஞ்சியம், ஆலய வீதி, கோண்டாவில் கிழக்கு

ஆதிபராசக்தி பந்தல் சேவை சென்.செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு.

வனஜா, வர்சிகா தொலைத்தொடர்புசேவை
வெளியூர்: 009460222972
உள்ளூர்: 0602212972
ஆஸ்பத்திரி வீதி கோண்டாவில் கிழக்கு.

விஷ்ணு பந்தல் சேவை ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு.

(C/35494)(38-12-14)



## மங்களகரமாக ஆரம்பமாகின்றது

இன்று (09.06.2004) புதன்கிழமை முற்பகல் 10.38 மணிமுதல் 11.48 மணி வரையான சுபநேரத்தில் (பழைய நேரம்)

## நியூ ராஜன் சிகை அழககம்

என்னும் ஸ்தாபனம் நவீனமயப்படுத்தப்பட்டு அதே கட்டடத்தில் இயங்கத் தொடங்குகின்றது
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட அழககம்

பேசியல் ✲ ஹெயார் ஸ்ரேட்டிங் ✲ Face மசாஜிங்
✲ Hair கலறிங் ✲ விஷேட முகசவரம் ✲ தலை கழுவுதல்
என்பவற்றிற்குச் சிறந்த இடம்.

ஆண்கள், பெண்களுக்கான சிகை அலங்கரிப்பில் விஷேடபயிற்சி பெற்ற நிபுணர்களால் சிகை அலங்கரிப்புச் செய்யப்படும்.

▲ அழகுசாதனப் பொருள்களும் விற்பனைக்குண்டு.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.7, மத்திய சந்தை, மானிப்பாய். (35498)(43-12-14-16) திரு.K.V.ராஜன் (உரிமையாளர்).



## IIS இன் அதிரடி கட்டணச் சலுகை

## Diploma in Information Technology

காலம் : 3 மாதம்

2,500/= மட்டுமே

பதிவுக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது
இப்பிரிவுக்கு மட்டுமே இக்கட்டணச்சலுகை வழங்கப்படும்.

ஆரம்பம் 19 / 06 / 2004 பகல் 10.00 மணி

அதிக மாணவர்களின் ஆசை கணனிகல்வியைக் கற்க IIS இல் இணைய வேண்டும் என்பதே.

பெற்றோர்கள், கல்வியாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க, எமது நிர்வாகம் பெற்றோர்களின் பொருளாதார வசதிகளைக் கருத்தில்கொண்டு மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்படி கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

மிகச்சிறந்த ஓர் அடிப்படைக் கணனிக்கல்வியைப் பெற்றுக்கொள்ளத்தக்கவகையில் ஆராய்ந்து சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறியாகும்.

A/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களே !

பரீட்சை முடிவுகள் வெளியாகவுள்ள உங்கள் பொன்னான காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு IIS உடன் இணைந்து கொள்ளுங்கள்

19.06.2004 இல் ஆரம்பிக்கப்பட இருக்கும் எமது 8வது பிரிவுடன் மாணவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.

இம்மாதம் ஆரம்பிக்கப்பட்ட, ஆரம்பிக்கப்பட இருக்கின்ற டிப்ளோமா கற்கைநெறிகளிற்கு பதிவு செய்துள்ள, பதிவு செய்யவுள்ள மாணவர்களுக்கு மேற்படிகற்கை நெறியினை எவ்விதகட்டணமுமின்றி முற்றிலும் இலவசமாக கற்க முடியும்.

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
An *Edexcel* Approved Training Centre
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk
Branch: IIS, Nelliyady, Karaveddy T.P No: 021-226 3335
Member • Association of Computer Training Organisations ACTOS


## காலாவதியான பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்9

யாழ்.நகரப்பகுதி வியாபார நிலையங்களில் காலாவதியான மற்றும் பாவனைக்குதவாத பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

வியாபார நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்ட பொதுச சுகாதாரப் பரிசோதகர்கள் குழு புளி, கோதுமைமா, பாஸ்மா வகைகள், பிஸ கற் வகைகள், இனிப்பு வகைகள், பழுதடைந்த அரிசி என்பவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களின் சம் மதத்துடன் அவற்றை அழித்தது.

இதேவேளை, பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் பற்றிய விவரங்களைத் தமக்கு அறி யத்தருமாறு யாழ்.மாநகரசபை வைத் திய அதிகாரி எம்.மரியதாசன் கேட்டுள் ளார். (10-ரி)


நாகம்ஸ் சுன்னாகம்




டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ்
(ரீஸ்ஸ்) நடித்த
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(35399)(12)



ராஜா யாழ்ப்பாணம்

3 ஆவது வாரம்
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா, சித்தார்த், த்ரிஷா நடித்த



காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517) (22)



நிர்மலீஸ்வரன் சங்கானை
கார்த்திக், ரோஜா, மணிவண்ணன
நடித்த சின்னராஜா
காட்சிநேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே) (ரீஸ்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக்கு
(சி-34420)(29) AMPRICAN PIE

# தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

# தீவுத் திடல் கூட்டங்கள் அ.தி.மு.கவின் அநாகரிகம்

நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.

பாஜ. - அ.தி.மு.க. கூட்டணியின் தேர்தல் பிரசாரத்திற்காக பிரதமர் வாஜ்பாய் மே மாதம் 5ஆம் திகதி சென்னை வருவதாயிருந்தது. சென்னைக்கு வரும் வாஜ்பாய் தீவுத் திடலில் நடைபெறும் கூட்டத்தில் பங்கு பற்றியவுடனேயே டில்லி செல்வதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. பா.ஜ.கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கோவைத் தொகுதியில் போட்டியிட்டார். அவரது தொகுதியில் அவருக்குப் போதிய ஆதரவு இல்லை என்பதால் தமிழ்நாட்டிற்கு வரும் வாஜ்பாய் தனது தொகுதிக்கு வந்து பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என அடம்பிடித்ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு வந்த வாஜ்பாய் திருப்பூருக்குச் சென்று சி.பி ராதாகிருஷ்ணனை ஆதரித்துக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

வாஜ்பாய் பங்கேற்கும் சென்னைக் கூட்டத்திற்கு அதிக சனத்திரளைச் சேர்ப்பதில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கட்சி ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுச் செயற்பட்டன. கூட்டத்தில் கலந்து கொள்ளும் அ.தி.மு.க ஆதரவாளர்கள் "அம்மா வாழ்க" எனப் பெருமெடுப்பில் கோஷமிடுவார்கள் என எதிர்பார்த்த பா.ஜ.கட்சியினர் "பாரத் மாதா கீ ஜே" என தமது சார்பில் உரத்துக் கோஷமெழுப்புவது எனத் திட்டமிட்டனர். அதேநேரம் எப்படியேனும் வாஜ்பாயின் மேடையில் ரஜனியை ஏற்றுவது குறித்தும், பா.ஜ. கட்சியினர் தீவிரமாகச் சிந்தித்தனர். இந்த முயற்சியில் ஈடுபட்டால் ஜெயலலிதா ஆத்திரமடைவார். நிலைமை மோசமாகிவிடும் என்ற அச்சமும் அவர்களுக்கு இருந்தது.

வாஜ்பாய் இந்தியப் பிரதமர். அ.தி.மு.க. - பா.ஜ. கூட்டணிக்கு ஆதரவு திரட்ட சென்னை வருகிறார். அவரை சென்னை விமான நிலையத்தில் சென்று ஜெயலலிதா கட்டாயம் வரவேற்க வேண்டும். நாட்டின் பிரதமரை மாநில முதல்வர் வரவேற்பது மரபு. மேலும் அந்தக் கூட்டணியின் பங்காளியான பா.ஜ. கட்சியின் தேசியத் தலைவர் வாஜ்பாய். எனினும் ஜெயலலிதா வாஜ்பாயை விமான நிலையம் சென்று வரவேற்கவில்லை. இது வாஜ்பாயை அவமதித்த செயலுக்கு ஒப்பானது என பா.ஜ. கட்சியினர் கருதினர். இரு கட்சியினரும் தங்கள் தங்கள் சொந்த விலாசங்களைக் காட்டும் விதத்தில் கொடிகள், தோரணங்களுடன் கோஷங்களை எழுப்பினரே தவிர அந்தக் கூட்டம் தங்கள் கூட்டணிக்கு ஆதரவு திரட்டவே ஒழுங்கு செய்யப்பட்டது என்பதை இரு தரப்பினரும் மறந்தனர். ஜெயலலிதா வழமைபோலவே சோனியாவைப் பற்றி தனிப்பட்ட விதத்தில் விமர் சனத்தை மேற்கொண்டார். வாஜ்பாய் இந்தத் தேர்தலானது யார் நாட்டை ஆளவேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கே நடைபெறுகிறது எனவும் இந்தத் தேர்தலில் மாநிலப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது எனவும் தீவுத் திடல் கூட்டத்தில் தெரிவித்தார். அந்தக் கூட்டத்தை பொறுத்தவரையில் ஓரளவு சனத்திரளை திரட்டுவதில் மட்டுமே பா.ஜ. மற்றும் அ.தி.மு.கவினர் வெற்றிகண்டனர். அந்தக் கூட்டம் பெரும் சம்பிரதாயக் கூட்டமாகவே அமைந்தது.



ஜி.கே.வாசன்

ஆனால், 07.05.2004 அன்று அதே தீவுத் திடலில் நடைபெறவிருந்த கூட்டத்தில் சோனியா காந்தி மற்றும் கூட்டணித் தலைவர்கள் ஆதரவு திரட்டுவதற்கு முன்னரே நடுநிலைமை வகித்து வந்த வாக்காளர்கள் பலர் தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பது என முடிவுகட்டி விட்டனர். என்ன இது பிரசாரக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னரே ஆதரவு திரண்டது என நினைக்கிறீர்களா? ஆம்! அதுதான் நடந்தது. இந்த ஆதரவு தி.மு.க. அணியினரால் திரட்டப்படவில்லை. பதிலாக அ.தி.மு.கவினரின் நடவடிக்கைகளால் மக்கள் அ.தி.மு.கவை வெறுத்தனர்.

தீவுத்திடலில் வாஜ்பாய் பங்குபற்றும் பா.ஜ. மற்றும் அதி.மு.க. கூட்டணியின் கூட்டம் 05.05.2004 அன்றும் சோனியாகாந்தி பங்குபற்றும் தி.மு.க. கூட்டணியின் கூட்டம் 07.05.2004 அன்றும் நடைபெறுவதாகவும் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த விடயம் நேரகாலத்துடன் தமிழக மக்கள் அனைவருக்கும் தெரியும்.

ஆனால், தீவுத்திடலுக்குப் பொறுப்பான சென்னை நகராட்சி மன்றத்திடம் அ.தி.மு.கவினர் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மே 5 மற்றும் 6ஆம் திகதிகளில் தீவுத் திடலைப் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டனர். 5ஆம் திகதி இரவு வாஜ்பாய் பங்குபற்றிய கூட்டம் முடிந்தபோதிலும் 6ஆம் திகதி நள்ளிரவு வரை தீவுத்திடலைப் பயன்படுத்த தாங்கள் சென்னை நகராட்சி மன்றத்திடமிருந்து அனுமதி பெற்றுள்ளதாகவும் 6ஆம் திகதி நள்ளிரவே தாங்கள் அந்த இடத்தை விட்டகல முடியும் எனவும் அ.தி.மு.கட்சியினர் நாகரிகமற்ற முறையில் அடம்பிடித்தனர்.

6ஆம் திகதி நள்ளிரவே வாஜ்பாயின் கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட மேடை அகற்றப்பட்டது.


தயாநிதி மாறன்

எனவே, 7ஆம் திகதி சோனியா காந்தி பங்குபற்றும் கூட்டத்திற்காக வேறு மேடையை அமைக்க வேண்டியிருந்தது. இதற்கான கால அவகாசம் போதவில்லை. எனவே, வாஜ்பாய் கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட மேடை, ஒலி, ஒளி விநியோகம் ஆகியனவற்றை பயன்படுத்துவது என கூட்ட ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்தனர். ஆனால், மேடை, ஒலி, ஒளி ஒப்பந்தகாரர் தந்துதவ மறுத்துவிட்டார். வாஜ்பாய்க்காக அமைக்கப்பட்ட ஒழுங்குகளை சோனியா காந்தியின் கூட்டத்திற்கு கொடுத்துதவக்கூடாது எனவும் அப்படி மீறி நடந்தால் தேவையற்ற பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் என தமிழ்நாடு நிதி அமைச்சர் பொன்னையனும் சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபுவும் ஒப்பந்தகாரரை எச்சரித்துள்ளனர். இந்நிலையில் நிலைமையைச் சராக்கும் நோக்கில் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் அமைச்சர் பொன்னையனுடன் தொடர்புகொண்டபோது இது முதல்வரின் (ஜெயலலிதாவின்) உத்தரவு. எனவேதான் ஒன்றும் செய்ய முடியாது எனக் கைவிரித்துவிட்டார். பொன்னையனுக்கு முதல்வரின் கட்டளையை நிறைவேற்றியதில் திருப்தி. ஆனால், அந்தச் சம்பவத்தை மக்கள் எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் என்பதை அவர் சிந்திக்கத் தவறிவிட்டார்.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரை அதன் சொல், செயல் யாவும் மக்களுக்கு எதிராகவே அமைந்தன. அரசியல் அநாகரிகத்தின் உச்சகட்டமாக அந்தச் சம்பவம் அமைந்தது. இந்தச் சம்பவம் குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"ஜெயலலிதா பாவம். சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் கல்யாணம் நின்றுவிடும் என நினைத்தார். அதிலும் அவருக்குக் கிடைத்தது தோல்விதான். அவர் எதிர்பார்த்ததுபோல் கல்யாணம் நிற்கவில்லை. இவ்வாறான செயல்கள் மூலம் ஜெயலலிதா மேலும் மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்கிறார்" எனக் குறிப்பிட்டார்.

தி.மு.க. கூட்டணித் தொண்டர்களின் துரித முயற்சிகளால் புதிய மேடை அமைக்கப்பட்டு ஒலி, ஒளி ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

கூட்ட மேடையில் சோனியா காந்தி கருணாநிதி மற்றும் ஜி.கே.வாசன் ஆகிய மூவர் மட்டுமே இருந்தனர். மக்கள் அலைகடல் எனத் திரண்டனர். சோனியா காந்தி மிகவும் உணர்ச்சி பொங்கப் பேசினார்.

"எனது கணவர் ரத்தம் சிந்திய இந்தத் தமிழக மண்ணில் நின்று பேசுகிறேன். என் கணவருக்கு ஏற்பட்ட நிலை எனக்கு ஏற்படுமேயானால் அதைவிட எனக்கு வேறு பெருமை இல்லை" எனக் கூறியதும் உணர்ச்சி மிகுதியால் பலரது கண்கள் கலங்கின.

ஜெயலலிதாவின் ஆட்சியால் தமிழகத்தில் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் ஜெயலலிதா அனைவருக்கும் துரோகமிழைத்துவிட்டார் எனவும் இந்தத் தேர்தலில் நீங்கள் அளிக்கும் வாக்குகள் மாநில ஆட்சிக்கு (ஜெயலலிதாவின்) முடிவுகட்டுவதாய் அமையும் எனவும் சோனியா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கருணாநிதி கூறிய ஒரு சம்பவம் அனைவரையும் கண்ணீர் மல்க வைத்தது. (அவரது பேச்சின் சுருக்கம்)

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரது உடல் நிலை சீராகாத காரணத்தினால் அவரை மீண்டும் இந்தியா அழைத்துவந்து சென்னையிலுள்ள பிரபல மருத்துவமனையில் அனுமதிப்பது என அவரது குடும்பத்தினர் தீர்மானித்தனர். அதன்படி சென்னையிலுள்ள பிரபல மருத்துவமனையில் முரசொலிமாறனுக்கு சிகிச்சை அளிப்பதற்கு புதிய உபகரணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அனைத்தும் ஆயத்தம். கடுமையான நோயாளியான முரசொலிமாறனை ஏற்றிய விமானம் சென்னை நோக்கிவந்து கொண்டிருக்கிறது. அந்த நேரம் கருணாநிதி சென்னையில் இல்லை. அதிகாலை தயாநிதி மாறனிடமிருந்து கருணாநிதிக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

'தாத்தா எல்லாம் பிசகிவிட்டது. நாங்கள் ஏற்பாடு செய்தபடி அந்த மருத்துவமனையில் அனுமதிக்க முடியாதாம்" எனத் தெரிவித்தார்.

"அதுபற்றி நான் விசாரிக்கிறேன்" எனக் கருணாநிதி தெரிவித்துவிட்டு மருத்துவமனையுடன் தொடர்புகொண்டபோது சரியான தகவல் தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும் அனுமதிக்க மாட்டோம் என அவர்கள் கூறவில்லை.

எனவே, கருணாநிதி இந்தத் தகவலை பேரன் தயாநிதி மாறனுக்கு தொலைபேசியில் தெரிவித்தார். ஆனால், சிறிது நேரத்திற்குள் மீண்டும் தயாநிதி மாறன், "தாத்தா, அவர்கள் உங்களுக்கு பொய் கூறிவிட்டார்கள். அப்பாவை அங்கு அனுமதிக்கக்கூடாது என மேலிடத்து உத்தரவாதம்" எனத் தெரிவித்தார். முடிவில் தயாநிதி மாறனுக்குக் கிடைத்த தகவல்கள் சரியானவையே. கடுமையான நோயினால் பாதிப்புற்ற ஒரு நோயாளியை மருத்துவமனையில் அனுமதிக்கவேண்டாம் என உத்தரவு போடுவது என்பது மிகமிக அநாகரிகமான செயல். அந்த உத்தரவை வழங்கியது யார் என்பதை நீங்கள் தற்போது புரிந்திருப்பீர்கள். கருணாநிதியின் அந்தப் பேரன் தயாநிதி மாறன் இன்று மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்ல மத்திய அமைச்சரும்கூட.

கருணாநிதி கூறிய இந்தச் சம்பவம் பலரது மனதை நெகிழவைத்தது.

தீவுத்திடலில் இரு அணிகளும் தங்கள் தங்கள் தேசியத் தலைவர்கள் பங்கேற்ற பிரசாரக் கூட்டங்களை நடத்தின. கூட்டங்களின் நோக்கமே ஆதரவைத் திரட்டுவதே ஆகும். ஆனால், அ.தி.மு.க. அணியினர் தாங்கள் நடத்திய கூட்டத்தின் பலனாக புதிய ஆதரவு எதையும் திரட்டவில்லை. கூட்டமேடை தொடர்பாக அ.தி.மு.கவினர் மேற்கொண்ட அநாகரிக நடவடிக்கைகளால் தி.மு.க.கூட்டணியினர் பக்கம் அவர்களது கூட்டம் இடம்பெறுவதற்கு முன்னரே அனுதாப அலை வீசத்தொடங்கிவிட்டது. மேலும் கூட்டத்தில் சோனியா காந்தி மற்றும் கருணாநிதி ஆகியோர் ஆற்றிய உரைகள் நெஞ்சங்களைத் தொட்டன. வடசென்னை, மத்திய சென்னை மற்றும் தென்சென்னை ஆகிய தொகுதிகளை எப்படியேனும் கைப்பற்ற வேண்டும் என ஜெயலலிதா கட்டியிருந்த மனக்கோட்டை அன்றே சரிந்தது. ஜெயலலிதா மிக நாகரிகமாக - மிகக் கௌரவமாக - நடந்தால்கூட இந்த மூன்று தொகுதிகளும் அவருக்கு எட்டாக் கனிகளே.

தமிழ்நாட்டில் ரஜனிகாந்திற்கு மக்களிடையே ஆதரவு உண்டு என்ற கருத்து தேர்தலுக்கு முன்னர் நிலவியது. அதுவும் ஜெயலலிதாவின் எதிரணியிலுள்ள பாட்டாளி மக்கள் கட்சிக்கும் ரஜனி காந்துக்கும் நேரடி மோதல் ஏற்பட்ட சூழ்நிலையில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிட்ட அரக்கோணம், திண்டிவனம், தர்மபுரி, செங்கல்பட்டு, சிதம்பரம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய தொகுதிகளில் அக்கட்சியை எப்படியும் தோற்கடிப்பதாக ரஜனிகாந்த் சபதமெடுத்துள்ள நிலையில் ஜெயலலிதா ஏனோ அவரது ஆதரவை ஒதுக்கித் தள்ளினார் என்பது புரியாத புதிராகவே உள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கும் வேளையிலேயே தீவுத்திடல் கூட்டத்தில் பங்கேற்க மே 5ஆம் திகதி வாஜ்பாய் சென்னை வந்திருந்தார். அவரை ஜெயலலிதா விமான நிலையம் சென்று வரவேற்கவில்லை என முன்னர் குறிப்பிட்டிருந்தோம். ஜெயலலிதா விமான நிலையம் சென்று வாஜ்பாயை வரவேற்காததற்கான காரணம் பின்னர் தெரியவந்தது. அதாவது வாஜ்பாயை சென்னை விமான நிலையத்தில் ரஜனிகாந்த் சந்தித்தார். அது ஜெயலலிதாவுக்குப் பிடிக்கவில்லை. எனவேதான் அவர் வாஜ்பாயை வரவேற்க விமான நிலையம் செல்லவில்லை எனக் கூறப்பட்டது.

சிவகாசி வை.கோவின் தொகுதி. இம்முறை வை.கோ. அங்கு போட்டியிடவில்லை. பதிலாக ம.தி.மு.க. சார்பில் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் அங்கு போட்டியிட்டார். அந்தத் தொகுதியில் தேவர் குலத்தவர்களே அதிகம். எனவே, அ.தி.மு.க. சார்பில் தேவர் குலத்தைச் சேர்ந்த பா. கண்ணன் அங்கு போட்டியிட்டார். ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அது ம.தி.மு.கட்சியின் கோட்டை என்பதால் அதை எப்படியேனும் கைப்பற்ற வேண்டும். ஜெயலலிதா ஆடம்பரத்தில் மிகவும் விருப்பம் கொண்டவர். அ.தி.மு.கவில் ஜெயலலிதாவைத் தவிர ஏனையோரின் ஒரே அபிலாசை அம்மாவைத் திருப்திப்படுத்துவதேயாகும். சிவகாசித் தொகுதியில் ஜெயலலிதா கலந்துகொள்ளவிருந்த மேடை மல்லிகை மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.


அமைச்சர் பொன்னையன்

ஜெயலலிதா மேடைக்கு வருவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் அந்த மல்லிகை மாலைகள் மீது மல்லிகை மண சென்ற் விசிறப்பட்டது. இயற்கையாகவே மல்லிகைப்பூ நறுமணமுடையது. ஆனால், "அந்தம்மாவுக்கு அதுக்கு மேலேயும் மணம் தேவைப்படுகிறது. இப்படி அந்தம்மாவைத் திருப்திப்படுத்தும் வேலை மட்டும்தான் தமிழ்நாட்டில் நடக்கிறது" என அ.தி.மு.கவினரே விசனம் தெரிவித்ததாகத் சொல்லப்படுகிறது.

இதேபோல் தேர்தல் பிரசாரத்திற்காக ஜெயலலிதா தென்மாவட்டம் ஒன்றுக்குச் சென்றுள்ளார். அவர் மேடைக்கு வரும் பாதையில் விலையுயர்ந்த செங்கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அவர் மேடைக்கு வருவதற்குச் சற்று முன்னர் அந்தக் கம்பளத்தை அ.தி.மு.க. தொண்டர்கள் 'பிரஸ்' கொண்டு சுத்தப்படுத்தினர். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன. ஜெயலலிதாவிற்கு அப்படி ஓர் ஆடம்பர விருப்பம். விவசாயிகளும் தொழிலாளர்களும் வறுமையால், பட்டினியால் வாடிக்கொண்டிருக்கையில் இந்த ஆடம்பரங்கள் அவர்களுக்கு வயிற்றெரிச்சலை, வெறுப்பை உண்டாக்காதா? (வளரும்)

# இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும்

## சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வற்புறுத்து

லண்டன்,ஜூன்9

இலங்கையில் பணிபுரியும் சகல பத்திரிகையாளர்களதும் பாதுகாப்பை உறுதிசெய்யும்படியும், இலங்கையில் உண்மையான பத்திரிகைச் சுதந்திரத்துக்கான சூழ்நிலைகளை உருவாகும்படியும் உங்கள் அரசைக் கேட்டுக கொள்கின்றோம்.

-இவ்வாறு வற்புறுத்தும் கடிதம் ஒன்றை சர்வதேச பத்திரிகையாளர்களின் சம்மேளனம் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வெவ்வேறாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகம் முழுவதும் 5 லட்சம் பத்திரிகையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர்களின் சம்மேளனம் தமிழ்ப் பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டிக்கின்றது.

நடேசன் கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் உப தலைவராக இருந்துள்ளார். வீரகேசரி, சக்தி தொலைக்காட்சி, லண்டன் ஐ.பி.ஸி. தமிழ்ச்சேவை முதலியவற்றுக்கு அவர் செய்தியாளராக இருந்து வந்துள்ளார். 2000 ஆம் ஆண்டுக்கான சிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர் என்ற விருதையும் அவர் பெற்றிருக்கிறார். இனப்பிரச்சினையின் வரலாறு என்ற நூலுக்கான சாகித்தியப் பரிசிலினையும் அவர் பெற்றுள்ளார்.

ஒரு பிரபல்யமான பத்திரிகையாளர், கொல்லப்படுவதென்பது எப்பொழுதுமே அதிர்ச்சியளிக்கும் சம்பவம்தான் . இந்தக் கோரக் கொலையானது இலங்கையில் இப்பொழுது முன்னெடுக்கப்படும் அமைதி முயற்சி தொடரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரில் ஊடகம் தனது இறுதிப் பிசை வழங்கும் நிலை ஏற்படக்கூடாது. இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கெதிரான பல தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கும் நிலையில் இந்தக்கொலை நடந்திருக்கின்றது.

கடந்த மாதம் 3ஆம் திகதி ஊகவியலாளர் சிவரா மின் இல்லம் பொலீஸாரால் சோதனை இடப்பட்டதையடுத்து இக்கொலை நடைபெற்றுள்ளது.

இக்கொலை பற்றிப் பாகுபாடற்ற புலனாய்வுகள் நடத்தப்படவேண்டும். இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனம், இவ்வாறான கடிதங்களை இலங்கை பொலீஸ்மா அதிபர் மற்றும் பொலீஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளது.




மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா ஒன்றை அண்மையில் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் நடத்தியது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சண்டிலிப்பாய் கோட்டத்திலும் வலிகாமம் வலய மட்டத்திலும் முதலாமிடம் பெற்ற மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலய மாணவன் க.பிரசாந்தனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: வலி.தென்மேற்கு செய்தியாளர்.)

### புலிகளின் இடைக்கால அதிகார சபை:

# ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளுக்கு விளக்கும்

கொழும்பு,ஜூன்9

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்வரைவு தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜே.வி.பி. அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விளக்கிக் கூற முடிவுசெய்துள்ளது. இந்த நாடுகளின் கொழும்பிலுள்ள தூதுவர்களைச் சந்தித்து இது குறித்து விளக்கமளிக்க ஜே.வி.பி. முடிவு செய்துள்ளது என அக்கட்சியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான திகதிகளை முடிவு செய்வதில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இந்த இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய விடயமே சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய புலிகளின் திட்டம் தொடர்பாக ஜே.வி.பி. எவ்விதமான சிந்தனையைக் கொண்டிருக்கிறது என்பதை சர்வதேச சமூகத்திற்கு விளங்கப்படுத்துவது அவசியமாகியுள்ளதென்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கொள்கைகளின் அடிப்படையில் இலங்கையின் இறைமையையும் பிரதேச ஆதிபத்தியத்தையும் தற்காத்துக்கொண்டு சகல தரப்பு மக்களினதும் சட்டபூர்வ உரிமைகளை மதிக்கும் வகையில் பேச்சுக்கள் மூலம் உருவாகும் தீர்வொன்றே நீடித்து நிலைக்கக் கூடியதாய் இருக்கும் என கடந்தவாரம் பிரஸல்ஸில் கூடிய உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கூட்டத்தில் அறிவித்திருந்ததாக சுட்டிக்காட்டியுள்ள விமல் வீரவன்ஸ, இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான முன்வரைவு அதன் தற்போதைய வடிவில் இடம்பெறமுடியாது -என்றார். பேச்சுக்களை முன்னெடுப்பதில் இதுவே முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது என்றும் - அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளை பேச்சுகளுககுத் திரும்பும்படி சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அவர் சொன்னார். யதார்த்தபூர்வமான ஓர் அடிப்படையில் புலிகளைப் பேச்சுக்கு வரும்படி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமை வற்புறுத்த வேண்டும் என்று வீரவன்ஸ மேலும் குறிப்பிட்டார்.

(ப)

# நயினாதீவு உற்சவ தினங்களில் 23 படகுகள் சேவையில் ஈடுபடும்

## செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ளச் செல்லும் அடியவர்களின் கடல் போக்குவரத்துக்கென 23 படகுகள் பயன்படுத்தப்படும். இதற்கான அனுமதிப்பத்திரங்களை இலங்கைத் துறைமுக அதிகாரசபை வழங்கும்.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவின் ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் அண்மையில் யாழ்மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் ஆசிவசுவாமி தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ இம்முறை பயணிகள் சேவையில் ஈடுபடும் ஒவ்வொரு படகுகளின உரிமையாளர்கள் ஆயிரத்து 500 ரூபா வீதம் வேலணைப்பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டும்.

★ குறிகாட்டுவான் இறங்குதுறையில் விழுந்துள்ள இரும்புக்கேடரை தூக்கி எடுப்பதற்கு இலங்கை மின்சார சபையிடமோ அல்லது கடற்படையிடமோ தொடர்புகொள்ளுதல்.

★ இம்முறை வழமைபோலவே பஸ்சேவைகள் நடத்தப்படும். வட பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் வழமையான இடத்தில் நிறுத்தப்படும். அடியார்களின் எண்ணிக்கை அதிகரிக்குமிடத்து தேவையான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுக்கும் என்று சபையின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

★ தனியார் பஸ்கள் குறிகாட்டுவான் பேச்சியம்மன் கோயிலடியில் நிறுத்தப்படும், கார், துவிச்சக்கர வண்டி, ஓட்டோ முதலியவற்றின் நிறுத்துமிடங்களை வேலணைப் பிரதேச சபை தெரிவுசெய்யும்.

★ 20 வருடங்களாகத் தடைசெய்யப்பட்ட நயினாதீவு பிரதான வீதியைப் பொதுமக்களின் நன்மை கருதி திறந்து விடுமாறு கடற்படையின் வடபகுதிக்கான கட்டளைத் தளபதியுடன் தொடர்புகொள்வது.

★ அல்லைப்பிட்டியிலும், குறிகாட்டுவானிலும் பயணிகள் சோதனை நிலையங்கள் இயங்கும். அதில் தேசிய அடையாள அட்டைகள் பார்வையிடப்படும் என கடற்படைப்பிரதிநிதி தெரிவித்தார்.

★ உற்சவ காலங்களில் ஆலயச் சுற்றாடலில் தற்காலிகப் பொலீஸ் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இக்கூட்டத்தில் இலங்கை மின்சாரசபை மின் அத்தியட்சகர் வ.ஆறுமுகம், வ.போ.ச. பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை, ஊர்காவற்றுறை பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்மைக்கேல், காரைநகர் கடற்படைப் பொறுப்பதிகாரி ஐ.ஆர். பிரேமரட்ண, தீவகப் பிரதேச சபை அதிகாரிகள், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் பிரதேச செயலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (எ-76)

# ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் 22 பாடசாலைகளில் சத்துணவு

## தரம் ஒன்று முதல் ஒன்பது வரையான மாணவர் பெறுவர்

ஊர்காவற்றுறை,ஜூன்9

தீவகக்கல்வி வலயத்திற்குட்பட்ட ஊர்காவற்றுறை கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 9 வரையான வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் சத்துணவு வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய மேற்படி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் விவரங்கள் தீவகக்கல்வி வலயத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் ஊர்காவற்றுறை கோட்டத்திற்குட்பட்ட 22 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற முன்னாள் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமிக்கு மானிப்பாய் பிரதேச சபையினர் அண்மையில் பிரியாவிடை நிகழ்வு ஒன்றை நடத்தினர். இதன்போது உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அலுவலக [illegible] சபை உத்தியோகத்தர்களால் விழா மண்டபத்துக்கு அழைத்துச் [illegible] படத்[illegible] காணலாம். (எ-185)

# பிரதேச பொலீஸ் பொறுப்பதிகாரியை அழைத்து சட்டம், ஒழுங்கு பற்றியும் கலந்துரையாடுக!

## உதவி அரச அதிபர்களுக்கு அரச அதிபர் கடிதம்

கொக்குவில்,ஜூன்9

பிரதேசங்களில் மாதாந்தம் நடைபெறும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்குப் பிரதேச பொலீஸ் பொறுப்பதிகாரியை அழைத்துச் சட்டம், ஒழுங்கு தொடர்பாக ஆராய வேண்டும். சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பிரதேச செயலக மட்டத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களுக்கு [illegible] ஒன்றை யாழ்.அரச [illegible] பத்மநாதன் விடுத்துள்ளார்.

சட்டம், ஒழுங்கைப் பேணுவது தொடர்பாக ஆராய்வதற்காக யாழ். செயலகத்தில் கடந்த வாரம் கூட்டப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பியுள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையிலேயே மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிராம சேவையாளர்களுக்கு சமாதான உத்தியோகத்தர்கள் என்ற அடிப்படையில் பொலீஸாரின் கடமைகளில் செயலாற்றும் அதிகாரம் உண்டு. எனினும், தற்பொழுது பொலீஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் செயற்படுகின்ற காரணத்தினால இக்கடமைகளிலிருந்து அவர்கள் ஓரளவு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும், மாவட்டத்தில் அசாதாரண நிலை காணப்படுகின்றது. தற்பொழுது குற்றச்செயல்கள் அதிகரிக்கின்ற காரணத்தினால் அவற்றைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் வரை முன்னர்போல் கிராம சேவையாளர்கள் சமாதான அலுவலர்களாகக் கடமையாற்ற வேண்டியுள்ளது.

இது தொடர்பான பொதுமக்களின குற்றவியல் நடத்தைகள், நாடாளுமன்றம் குறிப்பிட்ட சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகள், சிவில் நடவடிக்கைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக பொதுமக்களினது முறைப்பாடுகளைப் பதிதல் வேண்டும். அவற்றிற்கு மேலதிக தேவைப்படுமிடத்து பொலீஸாருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இவை தொடர்பான நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் சம்மதத்துடன் மேற்கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, நிதி அமைச்சு நல்லிணக்கச் சட்டத்தின் கீழ், இலங்கையின் மற்றைய மாவட்டங்களில் தற்பொழுது செயற்படுத்தி வருவது போன்று கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நல்லிணக்கச் சபைகள் இங்கும் அமைக்கப்படவுள்ளன. இத்திட்டம் இம்மாவட்டத்திலுள்ள சிவில் சட்ட நடைமுறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவிருப்பதனால் அவற்றுடன் பிரதேச செயலர்கள் இணைந்து செயற்படுவது அவசியமாகும்.

மேலும், மாதாந்தம் பிரதேச செயலகங்களில் நடைபெறும் மாதாந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொலீஸ் நிலையங்களின பொறுப்பதிகாரிகளையும் அழைத்து, குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அவரது ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற வேண்டும் என்று அதில் உள்ளது. (எ-76)

# பாராட்டு விழா

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் அதிபர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற **திரு. N.மகேஸ்வரன்** அவர்களையும்

**திருமதி S.தனலிங்கம்** அவர்களையும்

இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர்களான

**திரு. V.சச்சிதானந்தம், திரு. N.செல்வரட்ணம்**

ஆகியோரையும் கோட்டக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய

**திரு. K.இரட்ணராஜா, திரு. S.பரமேஸ்வரன்**

ஆகியோரையும் பாராட்டி கௌரவிக்கும் விழா இன்று (09.06.2004) புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக கின்றோம்.

அதிபர் சங்கம்,
தெல்லிப்பழைக்
கல்விக் கோட்டம்.

(32887)(37-11-17-36)

# கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை உப அதிபர் திரு. க. சிவபாதம்*
*அவர்களது அன்புத் தாயார்*

**திருமதி கந்தப்பிள்ளை மகேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்குகொண்டு, அமரருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யாழ்.நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை,
மானிப்பாய்.

(32882)(37-11-17-36)

# பிறந்த நாள் நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம்**
**மாணிக்கலிங்கம்**
**(09.06.2004)**
என்றும் எங்களுடன்
ஆத்மார்த் தமாக
இணைந்திருக்கும்
உங்களுக்கு
எங்கள் பிறந்த நாள்
அஞ்சலிகள் .

*566 /3,காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (32884)(37-11-17-36)

- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகதாசன் ராஜேஸ்வரி

**(தொண்டமானாறு)**



தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகதாசன் ராஜேஸ்வரி அவர்கள் நேற்று (08.06.2004) செவ்வாய்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் சண்முகதாசனின் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்) அன்பு மனைவியும ரவிநாதன், ரவிராணி, ரவிவதனா, , ரவிகுமாரி, ரவிபுத்திரி, ஆகியோரின் பாசமிகுதாயாரும் காலஞ்சென்ற மாரிமுத்து-பாக்கியம் தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் சின்னத்தம்பி இரத்தினசிங்கம் - ஆச்சிப்பிள்ளையின் மருமகளும் தவரஞ்சினி, குருமூர்த்தி, ஞானச்சந்திரா, ஜெகதீஸன், அருந்தவராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கணேசன் (மலேசியா), இரத்தினசபாபதி (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் லதானி,யதுகுலகண்ணா, தர்மிளா, ராகவி, கேசவி, யதுர்சன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.06.2004) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தொண்டமானாறு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.இரவிநாதன்
(மகன்).

*தொண்டமானாறு.* (32885)(37-11-17-36)

## முன்பள்ளி கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்9

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் நடத்தும் முன்பள்ளிக் கல்விக்கண்காட்சி எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை யாழ்.மத்திய கல்லூரி மணடபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளா இ.இராமலிங்கம் கண்காட்சியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

பிரதம விருந்தினராக யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், சிறப்பு விருந்தினரான முன்பள்ளி உதவிக்கல்விப பணிபபாளர் திருமதி லோ.யோகராஜாவும கலந்துகொள்ளவுள்ளனர். (4-ரி)

## நேர்முகப் பரீட்சையை தவறவிட்டவர்களுக்கு!

தென்மராட்சி,ஜூன்9

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவைகளில் ஆள்சேர்ப்பதற்காக தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குச சமுகமளிக்காதவர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளாதவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளலாம் என பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (எ-117)

## பிற்போடப்பட்டது

தென்மராட்சி,ஜூன்9

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவுள்ள காலை உணவுத் திட்டம் தொடர்பாக உலக உணவுத் திட்டக்குழுவினால் எதிர்வரும் 14 ஆம், 15 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என இக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.(4-117)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் குகதாசன்

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் குகதாசன் அவர்கள் நேற்று (8-6-2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற பொனனம்பலவ் நீலாம்பிகையின் சிரேஷ்ட புதல்வரும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் மலீசாவின் பாசமிகு தநதையும் உருத்திரதாசன், காலஞ்சென்ற கலாநிதி, சசி (சுவிஸ்), கோகுலதாசன ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேந்திரன், சிவநேந்திரன் (சுவிஸ்) தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள இன்று (09.06.2004) புதன்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபுரவை இந்து மயானத திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
**பொன் உருத்திரதாசன்**
**(தம்பி)**

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு*

(35512)(36-11-17)



சிவமயம்
இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள் யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு நான்காவது தடவையாக வருகைதந்துள்ளார்.

**திரு. P.T.R.** அவர்களால்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா,
உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?,
தொழில்முன்னேற்றமில்லையா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?,
குழந்தைப் பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?
எதுவாயிருந்தாலும் ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள்.
இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

(32879) (11-17-36)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா இரத்தினம்



*(யாழ் மாநகரசபை மின்சாரசபை முன்னாள் ஊழியர்)*

ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தைச் சேர்ந்த சின்னையா இரத்தினம் அவர்கள் 06.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சின்னப்பிள்ளையின மூத்தமகனும், காலஞ்சென்ற திருமதி இரத்தினம் பாககியம அவரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா - சின்னாச்சி ஆகியோரின் மருமகனும் நாகேந்திரம், அரியரட்ணம், சிவமணி, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மோகன், புஸ்பராணி (சாந்தி), உதயகுமார் (ஜேர்மனி), இத்தினேஸ்வரி, சத்தியபாமா, சத்தியரூபி (சுவிற்ஸர்லாந்து), திவாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினசிங்கம், சசிந்திரா, கௌஷிகப்பிரியா (ஜேர்மனி), யோகேஸ்வரன், பிறேமதாஸ், சத்தியகரன் (சுவிற்ஸர்லாந்து), கிருஸ்சாந்தி ஆகியோரின் அருமை மாமனாரும் தர்ஷனா, கௌஷிகன், டனுஷன், ஜெனிஷன், அசினா, அபினா, டிலக்ஷன், சானுஜன், ஜெஞசிகா, நிகிலா, கீர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2004) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*154/12,ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம் வடமேற்கு,*
*யாழ்ப்பாணம்,* (32881)(37-11-17-36)

தகவல்:
இ.திவாகர் (மகன்)
குடும்பத்தினர்.

## பிலிப்பையா வரோணிக்கா

**(செபஸ்தியம்மா)**



யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா வரோணிக்கா நேற்று (08.06.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் - அன்னம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - ராசம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிலிப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான தேவசகாயம்பிள்ளை, அழகரெட்டினம் மற்றும் மெற்றி லம்மா(இந்தியா), நடராசா, கிளாறம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். டேவிட், காலஞ்சென்ற எட்வேட், ராணி (பிரான்ஸ்), பொஞ்சின், செல்லக்கிளி (நோர்வே), பிலிஸ்ரியா (இந்தியா), கிளி (பிரான்ஸ்), அன்ரன் ஜோசப் (துரைதாஸ் - பிரான்ஸ்), பவுண் (நோர்வே), பவுண்துரை (இந்தியா), அமில் (லண்டன்), றொபின் (நோர்வே), யதீஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோசப்பின், ரெத்தினக்கிளி, அல்போன்ஸ் (பிரான்ஸ்), சிலுவைதாஸ், மேவின் (நோர்வே), கனீசியஸ் (பிரான்ஸ்), தேவி (பிரான்ஸ்), சலன் (நோர்வே), ஜெனிலா (இந்தியா), காந்தன், குணேகா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*பாசையூர்,*
*யாழ்ப்பாணம்.* (32888)(11-17-36)

தகவல்:
பி.டேவிட் (மகன்).

## திருமதி அனிற்ரா கிறிஸ்ரீன் கணேசன்



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், பளை, தெல்லிப்பழையை சொந்த முகவரியாகவும் யாழ்ப்பாணம், கஸ் தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனிற்ரா கிறிஸ்ரீன் (டொலி சித்தி)(05.06.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் - மேரி தரேசா அவர்களின் பாசமிகு மகளும், கணேசனின் அன்பு மனைவியும், ரசிதா, ரெஜினா, பிரசாந்தன், விதுஜனா, சஞ்சீவ், லக்சி, திலக்ஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், விகி, சன் (இந்தியா), ரிற்றி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும லில்லியின் உடனபிறவாச் சகோதரியும் மரியயேசுதாசன்(சிறி - இத்தாலி)யின மாமியாரும அனிற்றாவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.06.2004 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கஸ்தூரியார்வீதி,*
*யாழ்ப்பாணம்.* (32890)(36-11-17)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

## செல்லத்துரை சிவக்கொழுந்து

**(நயினாதீவு)**

நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் வவுனியா சிவன்கோயில் வீதி,தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவக்கொழுந்து அவர்கள் நேற்று(8.6.2004) செவ்வாய்க்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகமுத்துவின் அன்பு மகளும காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளளை - நாகரத்தினம் அவர்களின் அன்பு மருமகளும் சதானந்தன் (சுவிஸ்), ஓங்காரநாதன் (லண்டன்), மாசிலாமணி (வவுனியா), திருவாசகம் (தியாகு-பிரான்ஸ்), காலஞ்சென்ற நேமிநாதன் (கதிர்காமம்), கமலேஸ்வரன்(கருணா - பிரான்ஸ்), மோகனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

118/12, சிவன்கோயில் வீதி,
தோணிக்கல்,
வவுனியா.TP-0244 589110 (32886)(36-11-17)

தகவல்:-
மகன் செ.மாசிலாமணி.



சிவமயம்

# மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் வைகாசித் திங்கள் 27 ஆம்நாள் இன்று (09-06-2004) புதன்கிழமை காலை9.00மணி முதல் 10.47 மணிவரையான சுப முகூர்த்தத்தில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

## அன்னை றெக்ஸ்

என்னும் ஸ்தாபனத்தை திறப்பு விழா செய்யவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"அன்னை றெக்ஸ்"
இல.23, நவீன சந்தை (உட்புறம்) சாவகச்சேரி.

திரு.க.சுதாகரன் (சுதன்)
-உரிமையாளர்-

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(ச-35511)(32-16-17)

# இயல்பு வாழ்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.பல நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மக்களின இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காது கண்டனப் பேரணியை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் எடுக கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பன வழமை போன்று இயங்கும்.

★ வர்த்தக நிறுவனங்கள் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், கண்டனப்பேரணியில் ஊழியர்களை பங்குபற்ற நடவடிக்கை எடுத்தல்.

★ அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன வழமைபோன்று செயற்படுவதுடன், அன்றையதினம் பேரணி இடம்பெறும் நேரத்தில் அலுவலர்கள் தமது கடமைகளை இடைநிறுத்தி பேரணியில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்தல்.

★ வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் தனியார் சிற்றூர்திகள் என்பன தமது வழமையான சேவையில் ஈடுபடலாம்.

★ இதேவேளை - அன்றைய தினம் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் கண்டனப் பேரணி கோயில் வீதி, சோமசுந்தரம் அவன்யூ ஊடாக யாழ்செயலகத்தைச் சென்றடையும். அங்கு வைத்து யாழ். அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும்.

இந்த மகஜரின் பிரதிகள் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் யாழ்.அலுவலகப பிரதிநிதிகளிடமும் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடலில் யாழ்மாவட்டத்திலுள்ள 30 இற்கு மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.(எ-4-5)

## விடுதலைப் புலிகள் மாத இதழ் இன்று வெளிவருகின்றது

யாழ்ப்பாணம்,ஜுன்9

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' வைகாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

'சமாதானத்தின் எதிர்காலம் சர்வதேசத்தின் கைகளில்' என்ற முகப்புச் செய்தியுடன் வெளிவரும் இவ்விதழில் 'சிங்கள அரசின் படுகொலை அரசியல்' என்ற தலைப்பில் ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. இவ்விதழில் பல்வேறு அரசியல் கட்டுரைகளுடன் மற்றும் வழமையான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

# நாங்கள் யாரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத் தடை உத்தரவினால் நாடாளுமன்ற செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு தடை விதிக்கப்பட்ட வண.அக்மீமன தயாரத்ன தேரரை நாடாளுமன்ற அங்கத்தவராக அங்கீகரிப்பது சட்ட விதிகளுக்கு முரணானது என்பதை சபாநாயகருக்கு தெரிவித்தோம். ஆனாலும் எமது கருத்துக்களை புறக்கணித்த சபாநாயகர், வண. அக்மீமன தேரருக்கு சத்தியப் பிரமாணம் செய்துவைத்தார்.

இதனால் ஆத்திரமடைந்த எமது உறுப்பினர்கள் சிறு குழப்பங்களில் ஈடுபட்டனர் என்பது உண்மை.

ஆனால் அவர்கள் யாரையும் தாக்கவில்லை.

இத்தகைய சூழ்ச்சியில் சபாநாயகருக்கும் பங்குள்ளது என நாம் கருதுகின்றோம் எமது அறுதிப் பெரும்பான்மை தொடர்பாக எதுவித சந்தேகமும் இல்லை. தற்போது எமக்கு 105 ஆசனங்கள் உள்ளன. எம்மோடு முஸலிம் காங்கிரஸின் 5 உறுப்பினர்களும், வேறு 3 உறுப்பினர்களும் உள்ளனர். எனவே, எமது அறுதிப் பெரும்பான்மையை விரைவில் நிரூபிப்போம் - எனக் கூறினார் அமைச்சர்.

தமக்கு 115 ஆசனங்கள் இருப்பதாக கூறும் ஐக்கிய தேசிய முன்னணி முடிந்தால் ஆட்சியை அமைத்து அதிகாரத்தை கைப்பற்றட்டும் எனவும் அவர் சவால் விடுத்தார்.

(எ-க-9-4)

# பெரும்பான்மைக்கு வக்கில்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் அனைத்து எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் உள்ளடங்கிய செயலாற்றுக்குழு ஒன்றையும் அவர்கள் அமைத்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டபின் தொடர்ச்சியாக இடம்பெற்ற மூன்று கூட்டத் தொடர்களிலும் காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களே இடம்பெற்று வருகின்றன. ஜே.வி.பியினரும் சுதந்திரக்கட்சியினரும் கூடி ஜனநாயகத்திற்கே சாவுமணி அடிக்க முனைகின்றனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியது பொறுப்புள்ள எதிர்க்கட்சியின் கடமை. அரசாங்கத்தின் ஜனநாயகவிரோத செயல்களைத் தொடரவிடமுடியாது என்பதால் நாம் ஒன்றுபட்டுள்ளோம் என்கின்றன எதிர்க்கட்சிகள். தேசிய ஹெல உறுமயவும், ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்தனியாக நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே எதிர்க்கட்சிகளின் முடிவை அவை உத்தியோக பூர்வமாக அறிவித்தன.

நாடாளுமன்றக் குழு அறையில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வண. எல்லாவல தேரரும், வண.உடுவே தம்மாலோக்க தேரரும் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, முன்னாள் சபாநாயகர் மைக்கல் ஜோஸப் பெரேரா, எதிர்க்கட்சிக் கொறடாவான மஹிந்த சமரசிங்க ஆகியோர் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை வெளியிட்டனர்.

ஹெல உறுமயவினர் தமது செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது:-

நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து முன் எப்போதுமே இல்லா வகையில் சந்திரிகா தலைமையிலான அரசின் 13 ஆவது நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்திற்கு அசசுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு ஆட்சி அமைத்த பின நாடாளுமன்றத்தில் மூன்று அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்திலுமே ஜே.வி.பியினரும், சுதந்திரக்கட்சியினரும் காட்டுமிராண்டித்தனமாகவே நடந்துள்ளனர்.

நாம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டபின் அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களுக்கு ஆதரவளிப்பது என்றே தீர்மானித்திருந்தோம்.

ஆனால், இந்த அரசு எந்த ஒரு நல்லகாரியத்தையும் செய்யவில்லை. மாறாக சண்டித்தனத்தையே காட்டுகின்றது.

நாடாளுமன்றம் முதன்முறையாகக் கூடிய போது எமது உறுப்பினர் ஒருவரைக் கடத்தினர். சபாநாயகர் தெரிவின்போது எதிர்க்கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த பௌத்தபிக்குமாரைத் தாக்கி, அவமானப்படுத்தியதோடு அகௌரவப்படுத்தினர்.

ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கேவலப்படுத்தும் வகையில் அரச ஊடகங்களைப பயன்படுத்தினர்.

இ.தொ.க.தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் பாதுகாப்பை வாபஸ் பெற்றனர்.

இன்று சத்தியப்பிரமாணம் செய்ய வந்த எமது சக உறுப்பினரைத் தாக்கினர். ஆபாச வார்த்தைகளைப் பிரயோகித்தனர். சபையில் அநாகரிகமாக நடந்து சபை நிகழ்வுகளைத் தடுத்தனர். செங்கோலையே தூக்கிக் கொண்டு ஓடினர்.

இவர்களால் எப்படி ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியும்? இதனாலேயே நாம் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படத்தீர்மானித்தோம என ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் கூறினர்.

ஐ.தே.க. தனது செய்தியாளர் மாநாட்டில் கூறியதாவது:-

இன்றைய அரசினால் ஜனநாயக ரீதியாகத் தனது பெரும்பான்மையைக காட்டமுடியவில்லை. இதனால் காடைத்தனத்தையும், நாடாளுமன்ற பயங்கரவாதத்தையுமே அறிமுகப்படுத்தி உள்ளது.

13 ஆவது நாடாளுமன்றம் கேவலப்படுத்தப்பட்டுள்ளது.

வண.அக்மீமன தயாரத்தன தேரரை தேர்தல் ஆணையாளர் மே 19 ஆம் திகதி முதல் நாடாளுமன்ற உறுப்பினராக அறிவித்துள்ளார். அதனை அரசாங்க வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

தேர்தல் ஆணையாளரால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை சத்தியப்பிரமாணம் செய்யவிடாமல் தடுத்து அராஜகம் புரிந்தனர். பௌத்த மதத்தையே கேவலப்படுத்தும் வகையில் நடந்து கொண்டதோடு, பௌத்த குருமாரைத் தாக்கியும் காயப்படுத்தியிமுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினராக ஒருவரின் பெயர் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நாள் முதல் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய சகல சிறப்புரிமைகளும் உண்டு. ஆனால் இன்றைய அரசு உறுப்பினரின அடிப்படை சிறப்புரிமைகளை மறுக்கிறது.

தேசிய ஹெல உறுமய உறுப்பினரான வண.அக்மீமன தேரர் சத்தியப் பிரமாணம் செய்யக்கூடாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளதாகக் கூறுகின்றனர்.

ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

நாடாளுமன்ற விவகாரங்களில் எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது என முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டார நாயக்க முன்பு இதே நாடாளுமன்றத்தில் தீர்ப்பு வழங்கியுள்ளார். அதன் அடிப்படையிலேயே சபாநாயகர் ஹெல உறுமய உறுப்பினரை சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள அனுமதித்தார். இதில் எந்தத்தவறும் இல்லை - என முன்னாள் சபாநாயகர் ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

"ஆளும் கட்சி உறுப்பினர்கள் செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டனர். அதன்பின்னரே ஹெல உறுமய உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். அது செல்லுபடியாகுமா?" - எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

"செங்கோல் ஒரு சம்பிரதாய அடையாளச்சின்னமே தவிர அத்தியாவசியம் அல்ல. ஹெல உறு[illegible] உறுப்பினரின் சத்தியப்பிரமா[illegible] செல்லுபடியாகும்" என முன்னாள் சபாநாயகர் பதில் அளித்தார்.

இப்படியான ஒரு சூழலில் தொடர்ந்து ஆளும் கட்சியினரின் அராஜகத்தை தொடரவிட முடியாது நாடாளுமன்ற ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும்.

இதன் அடிப்படையிலேயே எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஓரணியாகக் கூடி செயல்பட தீர்மானித்துள்ளோம். அதனை செயல்படுத்த ஐ.தே.க.பிரதித் தலைவர் கருஜயசூரிய தலைமையில் செயற்பாட்டுக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டளளது.

இக்குழு இன்று நாடாளுமன்றத்தில் கூடி சபாநாயகருக்கு கடிதம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளது. இக் கடிதத்தில் அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் ஒப்படைக்கவுள்ளோம். அப்போதும் ஆளும் கட்சியினர் ஜனநாயக மரபுகளுக்கு ஏற்ப நடக்க[illegible] வறினால் நாம் அடுத்தகட்ட ந[illegible]டிக்கையில் இறங்க நேரிடும் என எதிர்க் கட்சி கொறடா மஹிந்த சமரசிங்க கூறினார்.

(எ-க-9)

# நாடாளுமன்ற அசம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

நேற்று நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் வண.அக்மீமன தயாரத்ன தேரர் சத்தியப் பிரமாணம் செய்ய முற்பட்டதாலேயே இந்த அசம்பாவிதங்கள் ஏற்பட்டன.

வண.அக்மீமன தயாரத்ன தேரர் நாடாளுமன்றத்திற்குச் செல்லமுடியாது என நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியிருந்தது. இந் நிலையில் அவர் எவ்வாறு நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து சத்தியப் பிரமாணம் செய்யமுடியும்?

மேலும் இவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணியினரே காரணகர்த்தாக்கள் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

வண.அக்மீமன தயாரத்ன தேரர் சத்தியப்பிரமாணம் செய்ய முற்பட்ட போது அரசுத்தரப்பினராகிய நாம் சபாநாயகருக்கும் நாடாளுமன்ற செயலாளருக்கும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்காலத்தடை உத்தரவையும் காட்டி அவர் எவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்யலாம என வினாவினோம். ஆனால், சபாநாயகரும், நாடாளுமன்றச் செயலாளரும் எமது பேச்சைக் கருத்திற் கொள்ளாது ஐக்கிய தேசிய முன்னணியினரின் ஆதரவுடன் ஹெல உறுமயவின் தேரர் சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதித்தார்.

இது இலங்கை வரலாற்றிலே முதன்முறையாக இடம் பெற்றுள்ள ஒரு மாபெரும் இழுக்காகும். இந்த நடவடிக்கைக்கு சபாநாயகர் கட்டாயமாக பதில் சொல்லியே ஆக வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி ஜாதிக ஹெல உறுமயவை பகடைக் காய்களாகக் கொண்டு கூட்டமைப்பு அரசைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள். அதைக கண்டு நாம் அஞ்சவில்லை எனவும் விமல் வீரவன்ஸ கூறினார். (க)

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய செய்தியாளர் மாநாட்டில் இந்தச் சவாலை விடுத்தார்.

பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைத்து எமது பலத்தை நிரூபிப்பதற்கு வழி சமைக்கும் இன்னுமொரு தேர்தலுக்கு நாங்கள் தயார். நாடாளுமன்ற அமர்வுகளுக்கு முட்டுக்கட்டை போட்டு அரசிற்குப் பெரும் நெருக்கடியை தோற்றுவிக்கும் ஐ.தே. கட்சி அதற்குத் தயாரா. என்றார்.

எமது அரச அலுவல்களை மேற்கொள்வதற்கும் நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதற்கும் ஐக்கிய தேசிய முன்னணி முட்டுக்கட்டையாக இருக்கின்றது. அது மட்டுமல்ல விசமத்தனமாக நாடாளுமன்றத்தில் குழப்பநிலைகளையும் தோற்றுவிக்கின்றது.

வடமேல் மாகாண சபைத் தேர்தல்களில் எதிர்க்கட்சியினருக்குப் பாடம் புகட்டியது போன்று எமது பலத்தை வெளிப்படுத்தும் மற்றுமொரு தேர்தலுக்கு நாங்கள் தயார் என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (க)

# மரண அறிவித்தல்

## திருமதி அந்தோனியா கஸ்பார்செல்வம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி 6இல் வசித்தவருமாகிய திருமதி அந்தோனியா கஸ்பார் செல்வம் அவர்கள் நேற்று (08-06-2004) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் பிரதம அரசாங்க எழுதுவினைஞர் உயர்திரு.A.கஸ்பார் செல்வம் அவர்களது அன்பு மனையாளும், றூபி யேசுதாசன் (ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்), டோமினிக் (முன்னாள் கடற்படை வீரர்), மேரிறோஸ், பத்மநாதன் (ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்), டானியல் (ஓய்வு பெற்ற முன்னாள் இலங்கை இராணுவவீரர்), பெனடிக்ற் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), பேர்னாட்ஷா (ஆசிரியர்), இந்திரா, சந்திரா ஆகியோரது அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யேசுதாசன் (ஓய்வுபெற்ற முன்னாள் வன பரிபாலன உத்தியோகத்தர்) மற்றும் பத்மநாதன் (ஓய்வு பெற்ற அரச தொழில் அதிகாரியும் அகில இலங்கை சமாதான நீதிவானும்) யேசுராசன் (புதுக்குடியிருப்பு), மோகன், றோசலீன், சாந்தமேரி, புஷ்பராணி, பொன்றோஸ், நிமலம் ஆகியோரது அன்பு மாமியும் ரஜி (ஆசிரியை - கொழும்பு), அன்ரன் (இராஜகாரியர் கலாநிதி-லண்டன்), சுனேத்திரா (M.A. இந்தியா), ரெறன்ஸ் (கப்டன் - டுபாய்), வதனி, றொபி, வவாச்சி, ஜோன்ஷன் (சவூதிஅரேபியா), கிங்சன் (சுவிஸ்), நிக்ஷன் (பிரான்ஸ்), டிக்ஷன், லக்ஷன் (சுவிஸ்), லக்ஷினி, சந்திரன் (ஜேர்மனி), சந்திரிகா (ஜேர்மனி), றெக்ஸ் (லண்டன்), விஜி (லண்டன்), ஆனந்தி, அஜந்தன், மாவீரர் சீலமாறன் குளோறி, றோம், ஜெயதாஸ, கியூஸ், ரியூஸ், கபில்ராஜ், (சுவிஸ்); ஹெலின் (சுவிஸ்), சுது (லண்டன்), சுதா (இத்தாலி), சுபாஷினி (லண்டன்), சுவீற்றன் (லண்டன்), கிஞ்சியம்மா ஆகியோரது நேசமிகு பேர்த்தியாரும் சிந்து, டினேஸ், றொயிஸ், கிளிங்டன், குளோடியா, லவ்றா, வெயோன், ஷேனி, குளோவி, ஜொஸ்வா, ரோபியஸ், சுருதி, மில்க்கா, கோமஸ், ஜரினா, அனுஸ்ரானா, டில்லிக்குமாா ஆகியோரது பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (09-06-2004) புதன்கிழமை மாலை 5மணிக்கு நெடுந்தீவு பிரதான வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக நெடுந்தீவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

*பிரதான வீதி-6,*
*நெடுந்தீவு.* (32889)(11-17-32)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சிவசுப்பிரமணியம் சிவகுமார்

(சொல்சாட் மதுபானசாலை முகாமையாளர், யாழ்.)

அராலியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவகுமார் அவர்கள் நேற்று (08-06-2004) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அருட்செல்வியின் அன்புக் கணவரும் திருட்செந்தூரனின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தம் மீளலோசனாதேவி தம்பதிகளின் மருமகனும் சிவசுந்தரராசாவின் (சிவம்) சகோதரரும் மேனகாவின் மைத்துனரும் டிலைஷ்சன், சேயனாவின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-06-2004) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (32892)(11-17-32)

தகவல்:
சிவசுந்தரராஜா(சிவம்)

## வேலாயுதம் ரவிதேவி (பொன்னாள்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் ரதிதேவி 08-06-2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் (ஆசாரியார்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசாரியார்) - குஞ்சுமணியின் மகளும் காலஞ்சென்ற சிவநாதன் (ஆனந்தன்), புஷ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் றமேஸ், சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

*சில்லாலை தெற்கு,*
*பண்டத்தரிப்பு.* (32891)(11-17-32)

தகவல்:
வே.ரமேஸ் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.062004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.